வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No.: P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 27.07.2024 சனிக்கிழமை இதழ் : 209 பக்கங்கள் : 12

# செப். 21 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல்

## ஒகஸ்ட் 15இல் வேட்புமனு

கொழும்பு, ஜூலை 27

**ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறும் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அதிவிசேட வர்த்தமானி மூலம் நேற்று வெள்ளிக்கிழமை அறிவித்தது.**

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவோரின் கட்டுப்பணத்தை ஏற்கும் பணி நேற்றைய தினமே ஆரம்பமானது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிமனையில் கட்டுப்பணத்தை எதிர்வரும் ஒகஸ்ட் 14ஆம் திகதி நண்பகல் வரை வேட்பாளர்கள் செலுத்த முடியும்.

சனி, ஞாயிறு தினங்களை தவிர பணி நாட்களில் காலை 8.30 முதல் மாலை 4.15 வரை கட்டுப்பணத்தைக் கட்ட முடியும். அங்கீகரிக்கப்பட்ட

11

## நான்கு பேர் கட்டுப்பணம் செலுத்தினர்!

கொழும்பு, ஜூலை 27

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக நேற்றைய தினம் 4 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி சுயேச்சை வேட்பாளர்களாக ரணில் விக்கிரமசிங்க, சரத் கீர்த்திரத்ன ஆகியோரும் ஒஷல ஹேரத் அபிநவ நிவால் பெரமுன கட்சி சார்பிலும்

11

## தேர்தலில் சுயேச்சையாக களமிறங்குகிறார் ரணில்!

### கட்டுப்பணமும் செலுத்தினார்



கொழும்பு, ஜூலை 27

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயேச்சை வேட்பாளராகவே களமிறங்கவுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று வர்த்தமானி மூலம் அறிவித்தது.

நேற்றைய தினம் அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து முதல் நபராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட்டுப்பணத்தை செலுத்தினார். அவர் சுயேச்சையாக போட்டியிடவே கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சார்பில் அவரின் சட்டத்தரணி ரொனால்ட் சி பெரேரா கட்டுப்பணத்தை செலுத்தியிருந்தார். (ஐ)

## இரவோடிரவாக விகாரைக்கு காணி; திருகோணமலையில் பதற்றநிலை!



திருமலை, ஜூலை 27

விகாரை அமைப்பதற்காக இரவோடிரவாக பொது மக்களுக்கு சொந்தமான காணிகள் துப்புரவு செய்யப்பட்டமையால் திருகோணமலையில் பதற்றநிலை உருவாகியுள்ளது.

திருகோணமலை - குச்சவெளி - இலந்தைக்குளம் - 5ஆம் கட்டை பகுதியிலேயே இந்த நிலைமை ஏற்பட்டது.

11

## பதில் பொலிஸ் மா அதிபரை ஜனாதிபதி நியமிக்கமுடியாது

### பிரதமர் தினேஷ் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 27

பொலிஸ் மாஅதிபர் பதவி வெற்றிடமாக்கப்படவில்லை. எனவே, ஜனாதிபதியால் பதில் பொலிஸ் மா அதிபரை நியமிக்க முடியாது என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன நேற்று பாராளுமன்றுக்கு தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மாஅதிபரின் பதவி தொடர்பாக ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை குறித்து பாராளுமன்றத்தில் நேற்று அவர் ஆற்றிய விசேட உரையிலேயே இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய பொலிஸ் மாஅதிபரை நியமிக்க அரசமைப்பு பேரவை வழங்கிய அங்கீகாரத்தை நீதிமன்றத் தால் மாற்றியமைக்க முடியாது.

11

## பாணின் விலை 10 ரூபாயால் குறைந்தது

கொழும்பு, ஜூலை 27

பாணின் விலை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 10 ரூபாயால் குறைக்கப்பட்டதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இதேநேரம், யாழ்ப்பாணத்திலும் நேற்றிரவு 8 மணி முதல் பாணின் விலை 10 ரூபாயால் குறைக்கப்பட்டதாக யாழ்.

11

## சுதந்திர கட்சியின் வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ஷ அல்லர்!

### கட்சியின் பொதுச் செயலர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 27

வேட்பாளர் ஒருவரை களமிறக்கி வெற்றி பெறக் கூடிய நிலையில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி இல்லை என்பதே யதார்த்தம். அதற்காக, சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கவோ அல்லது விஜயதாஸ ராஜபக்ஷவை வேட்பாளராக முன்னிறுத்தவோ தயார் இல்லை.

- இவ்வாறு சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிறீலங்கா சுதந் திர கட்சியின் நிலைப்பாடு தொடர்பான

11

## தமிழ் பொது வேட்பாளரை தமிழ் அரசு கட்சி நிறுத்தாது

### சுமந்திரன் எம். பி. சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 27

"ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர் ஒருவரை நிறுத்தப் போவதில்லை என்று இலங்கை தமிழ் அரசு கட்சி தீர்மானித்துள்ளது", என சுமந்திரன் எம். பி. கூறியுள்ளார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட அவர்,

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஒரு சமூ கத்தை மாத்திரம் மையப்படுத்தி

11

## பெரமுன வேட்பாளர் யார்? திங்கட்கிழமையே முடிவு!

கொழும்பு, ஜூலை 27

பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது நாளை மறுதினம் திங்கட்கிழமை முடிவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று வர்த்தமானி மூலமாக தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று அறிவித்தது.

இந்த நிலையில், தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது நாளை மறுதினம் திங்கட்கிழமையே முடிவு செய்யப்படும் என்று அந்தக் கட்சியினர் தெரிவித்தனர். (ஐ)

## இளைஞரை கடத்திச் சென்று வாளால் வெட்டி சித்திரவதை!

### உரும்பிராயில் பயங்கரம்

- பா. பிரசன்னா -

யாழ்ப்பாணம், ஜூலை 27

தனது பெண் நண்பியை சந்திப்பதற்காக யாழ்ப்பாணம் வந்த இளைஞரை குழு ஒன்று கடத்திச் சென்று தலைமுடியை வெட்டியதுடன், அவரின் உடலில் வாளால் வெட்டியும் கீறியும் சித்திரவதை செய்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை உரும்பிராய் பகுதியில் இடம்பெற்றுள்ளது. பூநகரி கிராஞ்சியை சேர்ந்த பிரதீபன் வினுஜன்

11

## எந்தவொரு தீர்மானத்தையும் தமிழ் அரசு எடுக்கவில்லை!

### சிறீதரன் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக இலங்கை தமிழ் அரசுக் கட்சி எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதில்லை என்று இலங்கை தமிழ் அரசு கட்சி தீர்மானம் எடுத்துள்ளதாக

11

### எங்களின் ஆதரவு ரணிலுக்கே

## மகிந்த, பஸிலுக்கு தெரிவித்த பொதுஜன பெரமுன கட்சியினர்

கொழும்பு, ஜூலை 27

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவளிக்கவுள்ளதாக தமது கட்சியின் தலைவரான மகிந்த ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷவுக்கு பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என 75 பேர் பாராளுமன்ற வளாகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது பற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்காமல் தேர்தல் நடக்குமா? நடக்காதா என்று மக்களை மட்டுமின்றி அரசியல்வாதிகளையும் குழப்பிக்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேர்தல் அறிவிக்கப்பட்டதும் முதல் ஆளாக தேர்தலுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்தியிருக்கிறார்.

அதுமாத்திரமன்றி, தான் சுயேச்சையாக எந்தக் கட்சியின் சார்பிலும் இல்லாமல் போட்டியிடப் போகிறார் என்றும் தெரியப்படுத்தியிருக்கிறார்.

இதுநாள்வரை அவர் பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக போட்டியிடுவார் என்றே பலரும் நம்பிக்கொண்டிருந்தனர். பொதுஜன பெரமுனக்காரர்களும் அவ்வப்போது தமது கட்சியும் வேட்பாளரை நிறுத்தும் என்றும் அது ரணில் விக்கிரமசிங்கவாகவும் இருக்கலாம் எனவும் அறிவித்துக்கொண்டிருந்தனர்.

தேர்தலில் கடைசி "கிளைமாக்ஸ்"ஆக, மகிந்த - பஸில் - நாமல் மூவரும் மகிந்தவின் வீட்டில் சந்தித்து ரணிலுக்கு தமது கட்சி ஆதரவளிப்பதெனில் பிரதமர் பதவியைத் தமக்கு தரவேணடும் என்று நிபந்தனை விதிக்க, அந்த விடயம் ஊடகப் பரப்புக்குத் தெரியவர, ரணில் பாராளுமன்றத்தைக் கலைக்கப்போவதாக செய்தி பரவியது. முக்கிய அரசியல் கட்சி ஒன்றின் தலைவரே இந்த ஊர்க்குருவியுடன் தொடர்பு கொண்டு, "பிறேக்கிங் நியூஸ்" தெரியுமா என்று கேட்கும் அளவுக்கு கொழும்பில் பாராளுமன்றக் கலைப்பு விடயம் பேசப்பட்டது. ஆனால், மறுநாளே தேர்தல் திகதி அறிவிக்கப்பட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதல் ஆளாகக் கட்டுப்பணம் செலுத்தியிருக்கிறார்.

தமது கடைசிக்கட்ட முயற்சியும் ரணிலிடம் சரிவராமல் போகவே, ரணில்மீது கோபமடைந்துள்ள பொதுஜன பெரமுன நாமல் மூலம் அறிக்கை வெளியிட்டு தமது கோபத்தை வெளிப்படுத்தியிருக்கின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை இரண்டாக உடைத்தது போன்று தமது கட்சியையும் ரணில் பிளவுபடுத்திவிட்டார் என்றும் இதுவே, தாம் அவருக்கு செய்த உதவிக்கு தமக்கு அவர் தந்த பரிசு எனவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

அண்மையில், விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து - இயக்க்த்தை பிரித்த கருணா அம்மான் என்ற விநாயகமூர்த்தி முரளிதரன், ரணில் விக்கிரமசிங்கவே தனது பிரிவுக்குக் காரணம் என்றும் தான் பிரிந்து வந்ததாலேயே புலிகளை இலங்கை படையினரால் அழிக்க முடிந்தது எனவும் தெரிவித்திருந்தமை வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். இதன்மூலம் கருணா சொல்ல வந்தது, விடுதலைப் புலிகளை வெற்றிகொண்டவர்கள் ராஜபக்ஷவினர் அல்ல என்றும் அது ரணிலால்தான் சாத்தியமாகியது என்பதையுமே அவர் சொல்ல வந்தார் என்பதைப் புரிந்துகொள்ள அரசியல் அறிவு தேவையில்லை.

அதுவல்ல, நாம் சொல்ல வருவது, ரணில் தமது கட்சியை இரண்டாக உடைத்து விட்டார் என்பதற்கு புலிகளை உதாரணத்துக்கு அழைத்திருப்பது ரணில் தமது கட்சியையும் இல்லாமல் செய்துவிட்டார் என்பதை மறைமுகமாக சொல்வதாகவும் அர்த்தம் கொள்ளவேண்டியிருக்கின்றது.

ரணில் விக்கிரமசிங்க, பொதுஜன பெரமுனவின் வேட்பாளராகக் களம் இறங்க விரும்பவில்லை என்பதையும் அவர், அந்தக் கட்சியிலிருந்து பெரும்பாலானவர்களை - அதுவும் மக்கள் மத்தியில் ஓரளவுக்கேனும் வாக்கு வங்கியை தனிப்பட்ட முறையில் வைத்திருக்கின்றவர்களை பிரித்து எடுத்து அவர்களுடன் கூட்டணி அமைத்து போட்டியிடவே விரும்புகின்றார் எனவும் இந்தப் பத்தியில் பல தடவைகள் குறிப்பிட்டிருக்கின்றோம்.

இப்போது பொதுஜன பெரமுன, தம்மோடு எஞ்சியிருக்கும் ஒருசில தலைவர்களுடன் தனித்துவிடப்பட்டிருக்கின்றது.

இன்னமும் இரண்டு வாரங்களில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் என்ன செய்வது என்பதை முடிவெடுக்கவேண்டிய கட்டாயத்துக்கும் தள்ளப்பட்டிருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தல் என்றதும் இப்போதெல்லாம் தமிழ் பொது வேட்பாளர் பற்றியே நம்மவர்கள் பலரும் பேசிக்கொண்டிருக்கின்றனர். அண்மையில்கூட ஒருவர் அதுபற்றிப் பேச, அதற்கு சில ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டு வருகின்றன. "தமிழ் பொது வேட்பாளரால் மக்கள் ஆணை மலினப்படும்", என்றும் "விஷப்பரீட்சை வேண்டாம்", எனவும் தமிழ் அரசு கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் சிவஞானம் ஐயா கூறியிருக்கிறார். அவரின் கட்சியின் தலைவர் மட்டுமன்றி புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்ட சிறீதரனும் தமிழர் ஒற்றுமையை வெளிப்படுத்த இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவேண்டும் என்று கூறிக்கொண்டிருக்க, இவரோ அது விஷப்பரீட்சை என்கிறார்.

தாங்கள் சொல்வதை மக்கள் கேட்பார்களா என்ற சந்தேகம் இருப்பவர்கள் இவ்வாறு சஞ்சலப்படுவதைத் தவிர்க்க முடியாது தான்.

ஹோட்டல் ஒன்றில் சில நாட்கள் தங்கிய அவர், தான் கட்ட வேண்டிய கட்டணத்தை எல்லாம் கட்டிவிட்டு வெளியே வந்தார்.

திடீரென்று நினைவு வந்தவராக ஹோட்டல் சிப்பந்தியை கூப்பிட்டு "வேகமாக அறை எண் 202இற்கு ஓடு, அங்கே கட்டிலுக்கு அடியில் என் சின்ன சூட்கேஸ் இருக்கிறதா என்று பார்த்து விட்டு ஓடி வா. நான் இன்னும் பத்து நிமிடத்தில் வண்டியைப் பிடிக்க வேண்டும்" என்றார்.

ஏழு நிமிடத்துக்கு பிறகு சிப்பந்தி ஓடி வந்தான். "ஆமாம் நீங்கள் சொன்ன சூட்கேஸ் கட்டிலுக்கு அடியில் இருக்கிறது" என்று மூச்சிரைக்க சொன்னான்.

பொதுவேட்பாளர் பற்றி ஒருவர் ஒன்று சொல்ல, அதனை அப்படியே சொன்னால்தான் அவரின் கடைக்கண் பார்வை கிடைக்கும் என்று நினைப்பவர்கள் இப்படித்தான் சொல்வார்கள். அந்த ஹோட்டல் சிப்பந்திபோல.

- [illegible]

## வாள்முனையில் இளைஞரிடம் மோட்டார் சைக்கிள் வழிப்பறி!

யாழ்ப்பாணம், ஜூலை 27

வாள் முனையில் மோட்டார் சைக்கிளில் வழிப்பறி செய்யப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் இளைஞர் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

கோண்டாவில் இந்துக் கல்லூரி அருகே மோட்டார் சைக்களில் வந்த இளைஞரை இளைஞர் ஒருவர் வழிமறித்துள்ளார்.

மோட்டார் சைக்கிளை நிறுத்தியவரை வழிமறித்தவர் மறைத்து வந்திருந்த வாளால் வெட்ட முயன்றுள்ளார். தன்னை வெட்ட முயன்றவரை இளைஞர் எதிர்க்க முற்படவே, அங்கு மறைந்திருந்த மற்றொருவரும் வாளுடன் வெளி வந்து மோட்டார் சைக்கிளில் வந்தவரை வெட்ட முயன்றுள்ளார்.

இதையடுத்து, அவர் தனது மோட்டார் சைக்கிளை கைவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். இதையடுத்து, வாளால் இளைஞரை வெட்ட முயன்றவர்கள் அங்குநின்ற மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## வெளிநாடு அனுப்புவதாக மோசடி; 5 நாட்களில் 12 பேர் கைதாகினர்!

கொழும்பு, ஜூலை 27

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக மோசடி செய்த குற்றச்சாட்டில் கடந்த 5 நாட்களில் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 22ஆம் திகதி முதல் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வு பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கட்டார், நியூசிலாந்து, மலேசியா, ருமேனியா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்த குற்றச்சாட்டில் கைதானவர்களில் 5 பெண்களும் அடங்குவர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நாடு முழுவதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை!

கொழும்பு, ஜூலை 27

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், வேட்பாளர்கள், குடிமக்கள் மற்றும் முழு நாட்டின் பாதுகாப்பை சிறந்த முறையில் உறுதிப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக் கைகளையும் எடுக்கவேண்டும் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் பாதுகாப்பு பிரிவின் தலைவர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தத் தகவலை நேற்று அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமைச் சர்களின் ஆலோசனைக் குழு நேற்று பாரா ளுமன்றத்தில்கூடிய போது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் இந்த அறிவித்தல்களை வழங்கினார் என்றும் கூறினார். (ஐ)

## திரைப்படம் திரையிடல்

யாழ்ப்பாணம், ஜூலை 27

ஸ்பானிய திரைப்படமான "பெர்னாடா அல்பாவின் வீடு" இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு தந்தை செல்வா கலையரங்கில் திரையிடப்படவுள்ளது.

1987ஆம் ஆண்டு மரியோ கமுஸ் இயக்கத்தில் வெடரிக்கோ கார்சியா லோர்காவின் நாடக கதையின் திரைவடிவமாக வெளியான இந்தத் திரைப்படம் ஆங்கில துணைத் தலைப்புகளுடன் திரையிடப்படவுள்ளதாக யாழ்ப்பாணத் திரைப்பட கழகம் அறிவித்துள்ளது. (ஐ)

## கறுப்பு ஜூலை நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், ஜூலை 27

கறுப்பு ஜூலை, வெலிக்கடை சிறை படுகொலையின் 41ஆவது ஆண்டு நினைவஞ்சலி பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெறவுள்ளது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஏற்பாட்டில் இந்த நினைவஞ்சலி நிகழ்வு நடைபெறவுள்ளது. (ஐ)

## செப். 21 ஜனாதிபதி தேர்தல்; வரவேற்றது அமெரிக்கா!

கொழும்பு, ஜூலை 27

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறும் என்ற அறிவிப்பை வரவேற்பதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தமது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளார்.

இது ஜனநாயகத்துக்கான இலங்கையின் நீண்டகால அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மக்கள் தங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்கும் விதத்தில் அவர்களை வலுப்படுத்தும் நீதியான - சுதந்திரமான தேர்தலை எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## 36 மாணவர்களுக்கு இந்திய புலமைப்பரிசில்!

கொழும்பு, ஜூலை 27

இந்திய அரசாங்கத்தின் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் ஹிந்தி மொழி கற்பதற்கு 36 இலங்கை மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா பங்கேற்றிருந்தார்.

இந்தியா, இலங்கை இடையிலான கலாசாரம், மொழி, இலக்கியம் மற்றும் மத உறவுகளை மேம்படுத்துவதில் ஹிந்தி மொழி மற்றும் இலக்கியத்தின் பங்களிப்பை எடுத்துக்காட்டியுள்ளார்.

களனி பல்கலைக்கழகத்திலிருந்து ஆறு மாணவர்களும், சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்திலிருந்து நான்கு மாணவர்களும், சிறீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து நான்கு மாணவர்களும், அநுராதபுரம் - ரஜரட்டை பல்கலைக்கழகத்திலிருந்து நான்கு மாணவர்களும், கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து இரண்டு மாணவர்களும், பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்திலிருந்து இரண்டு மாணவர்களும், சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலிருந்து இரண்டு மாணவர்களும், மாத்தறை பல்கலைக்கழக கல்லூரியிலிருந்து இரண்டு மாணவர்களும், ஜேதவனாராமய பௌத்த மடாலயத்திலிருந்து மூன்று மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 27.07.2024 சனிக்கிழமை

குரோதி வருடம், ஆடி 11

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ஜனாதிபதி தேர்தல்

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுவிட்டது. மிகவும் குறுகிய காலத்தில் தேர்தல் நடைபெறவுள்ளது. இதுவும்கூட, தந்திரோபாயம் தான். அதிக நாட்களை வழங்கினால் கள நிலைமைகள் மாறி விடலாம் என்னும் அடிப்படையிலும் இவ்வாறானதொரு நகர்வை மேற்கொண்டிருக்கலாம். ஆனால், தேர்தல் களம் சாதாரண மானதாக இருக்கப் போவதில்லை. ஒருபோதும் இல்லாதவாறான போட்டி நிலைமை காணப்படலாம். இதனைத் தமிழ்த் தேசிய அரசியல் தரப்பு எவ்வாறு கையாளப் போகின்றது?

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தவேண்டும் என்னும் நிலைப்பாடு முதல் கட்டத்தைத் தாண்டி விட்டது. ஏழு கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபைக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்பாடு முதல் கட்டத்தைத் தாண்டுவதற்கான ஒரு செல்வடிவமாகும். இதன் அடுத்த கட்டம் இன்னும் சில தினங்களில் அல்லது வாரங்களில் தீர்மானிக்கப்பட வேண்டும். இந்தத் தீர்மானம் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை நிச்சயமானதாக்கும்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் ஓர் அரசியல் மாற்றத்துக்கான கருவியாக தொழில்படக்கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கின்றது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அதனை தமிழ் மக்கள் எவ்வாறு கையாளப் போகின்றனர் என்பதில்தான் விடயங்கள் அனைத்தும் தங்கியிருக்கின்றன. தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படுவதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் மீண்டும் மேசைக்கு வரும். தமிழ் மக்களின் அரசியலை மேசைக்குக் கொண்டுவருவதுதான் தமிழ் பொது வேட்பாளரின் முதல் இலக்காகும். ஏனெனில், தமிழ் மக்களின் பிரச்னை ஒரு தேசிய இனப்பிரச்னையாக இப்போது எவருடைய மேசையிலும் இல்லை.

முள்ளிவாய்க்காலுடன் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னையை ஒரு தேசிய இனப்பிரச்னையாக முன்கொண்டு செல்லக் கூடிய நிலையில் எந்தவொரு தலைமையும் இருக்கவில்லை. இதன் காரணமாகவே கடந்த பதினைந்து வருடங்களில் எந்தவொரு விடயமும் ஆக்கபூர்வமாக முன்னெடுக்கப்படவில்லை - உண்மையில், எவராலும் முன்னெடுக்க முடியவில்லை.

சம்பந்தனை தவறு என்று கூறிய கஜேந்திரகுமார் பொன்னம பலத்தாலும் எதனையும் நடைமுறையில் நிரூபித்துக் காண்பிக்க முடியவில்லை. இதேபோன்று, தமிழ்த் தேசிய கட்சிகள்மீது குற்றஞ்சாட்டும் அரசாங்கத்தின் அங்கமாக இருப்பதை கொள்கையாகக் கொண்டிருக்கும் கட்சிகளாலும் எதனையும் செயலில் நிரூபிக்கவில்லை.

சிலர் கூறுவதுண்டு, டக்ளஸ் முதல் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வரையில் அவ்வப்போது ஒரு விடயத்தை கூறுவதுண்டு. அதாவது, மக்கள் தங்களுக்கு அரசியல் பலத்தை வழங்கினால் நாங்கள் சில விடயங்களை நிரூபித்துக் காண்பிப்போம். இங்கு கேட்கப்பட வேண்டிய கேள்வி, ஏன் மக்கள் உங்களை பெருவாரியாக ஆதரிக்கவில்லை. அதற்கான காரணத்தையல்லவா நீங்கள் கண்டடைய வேண்டும்.

எனவே, சூழ்நிலையை கையாள்வதுதான் அரசியல். இங்கு எவர் எந்தக் கொள்கையுடன் இருக்கின்றார் என்பது இரண்டாவது, மூன்றாவது விடயம். அந்த அடிப்படையில் நோக்கினால் ஜனாதிபதித் தேர்தல் களத்தை எவ்வாறு கையாள்வது என்பதில்தான் தமிழ் மக்களின் இன்றைய காலத்துக்கான அரசியல் தங்கியிருக்கின்றது.

# காணி உரிமையே மலையக மக்களின் பிரதான கோரிக்கை

### வேலு குமார் எம். பி. தெரிவிப்பு

கண்டி, ஜூலை 27

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மலையக மக்களின் முதன்மை கோரிக்கையாக காணி உரிமை முன்வைக்கப்பட வேண்டும் என்று கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

மலையக பெருந்தோட்ட மக்கள் 200 வருடங்கள் கடந்தும் காணி உரிமை அற்றவர்களாகவே உள்ளனர். இன்றைய அரசாங்கம் அதனை மேலும் இழுத்தடிப்பு செய்யும், லயன் அறைகளை கிராமங்களாக பிரகடனப்படுத்தும் அமைச்சரவை பத்திரத்தை முன்வைத்துள்ளது.

இதனை சட்டமாக்கவும் முன்னேற்பாடுகளை செய்து வருகின்றது. மலையக மக்களின் காணி உரிமையை முழுமையாகக் குழி தோண்டிப் புதைக்கும் செயல்பாடாகவே இது உள்ளது. இதனை முளையிலேயே கிள்ளி எரிய வேண்டும்.

மாறாக ஜனாதிபதித் தேர்தலில் தனி வீட்டுக்கான காணி மற்றும் வாழ்வாதார காணி என்பவற்றை பெற்றுக்கொள்வதை முதன்மையான கோரிக்கையாக முன்வைக்க வேண்டும். அதனை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத் திட்டத்தை ஜனாதிபதி வேட்பாளர்கள் முன்வைக்கும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இல்லையெனில், இன்னும் ஐந்து ஆண்டுகளுக்கு காணி உரிமை ஒரு கோஷமாகவே பேசப்படும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# ஒப்பந்த கூலி அடிப்படையிலேயே கனடா தம்பதி மீது தாக்குதலாம்!

யாழ்ப்பாணம், ஜூலை 27

கனடாவில் இருந்து அனலைதீவு வந்த தம்பதி மீது நடத்தப்பட்ட தாக்குதலும் கொள்ளையும் கூலிக்கு அமர்த்தப்பட்டவர்களாலேயே நடத்தப்பட்டது என்பது தெரிய வந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் ஏற்கனவே மூவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இவர்களை கூலிக்கு அமர்த்தினார் என்று கூறப்படும் பிரதான சந்தேகநபரான பெண் ஒருவரும் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டார்.

அனலைதீவை சேர்ந்த கனடாவில் வசிக்கும் தம்பதியர் கடந்த ஆண்டு விடுமுறைக்காக அனலைதீவுக்கு வந்து தங்கியிருந்தனர். அவர்களின்மீது கடந்த ஆண்டு பெப்ரவரி 23ஆம் திகதி குழு ஒன்று வாள் வெட்டு தாக்குதல் நடத்தியது. இதன்போது, அவர்களிடமிருந்த வெளிநாட்டு பணம், நகை மற்றும் பெறுமதியான பொருட்கள், கடவுச்சீட்டுகள் என்பவை கொள்ளையடிக்கப்பட்டன.

இந்த கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட மூவர் கைது செய்யப்பட்ட நிலையில், அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், இந்த சம்பவத்தில் ஈடுபட பெண் ஒருவரே பணம் கொடுத்தார் என்று தெரிய வந்தது. தொடர்ந்த விசார ணையில் கடந்த புதன் கிழமை பிரதான சந்தேகநப ரான பெண் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் கனடாவை சேர்ந்த ஒருவரே தனக்கு பணம் அனுப்பி இந்த சம்பவத்தை செய்தார் என்று வாக்குமூலம் அளித்துள்ளார்.

இந்தப் பெண்ணை தடுத்து வைத்து விசாரிக்க ஊர்காவற்றுறை நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

இதேவேளை, கைதான பெண் கிளிநொச்சியை சேர்ந்தவர் என்றும் அவருக்கு எதிராக ஏற்கனவே கொலை வழக்கும், மோசடி வழக்குகள் சிலவும் உள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# புத்தக அரங்க விழாவில் இன்றைய நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம், ஜூலை 27

தேசிய கலை இலக்கிய பேரவையின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு "நூறு மலர்கள் மலரட்டும்" என்ற தொனிப் பொருளில் புத்தக அரங்க விழா சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நேற்று ஆரம்பமானது.

இன்றைய இரண்டாம் நாள் அமர்வு பிற்பகல் 4 மணிக்கு கவிஞர் சுபத்திரன் நினைவு அரங்க நிகழ்வாக நடைபெறவுள்ளது.

ஓய்வுநிலை அதிபர் எஸ். ஜெகநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நூல் அறிமுக உரைகளை அலெக்ஸ் பரந்தாமனின் "கடலலைகளை மேவிய கதை" நாவல் தொடர்பாக வவுனியா கல்வியியல் கல்லூரியின் ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி ந. இரவீந்திரன், பானுபாரதி மொழி பெயர்த்த நோர்வேஜிய கவிதைகளின் தொகுப்பான "உன்னத சங்கீதம்" நூல் பற்றி வலிகாமம் கல்வி வலயத்தின் உதவிக் கல்வி பணிப்பாளர் இயல்வாணன், வி. ஜீவகுமாரனின் "கடைக்குட்டியன்" சிறு கதைத் தொகுப்பு பற்றி கலாசார உத்தியோகத்தர் சபா. தனுஜன் ஆகியோர் ஆற்றுவர்.

மாலை 5 மணிக்கு சண் நாடகக் குழுவின் தயாரிப்பில் பு. கணேசராசாவின் எழுத்து மற்றும் நெறியாள்கையில் "தலையெழுத்து", "என்னவென்று சொல் வேனடி"ஆகிய நாடகங்கள் அரங்கேறவுள்ளன.

புத்தக கண்காட்சியும் மலிவு விற்பனையும் இன்றும் நாளையும் காலை 9 மணி தொடக்கம் நடைபெறும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 27 சனிக்கிழமை
குரோதி வருடம் - ஆடி 11

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 07.31 - 09.00 |
| ராகு காலம் | : | 09.00 - 10.30 |
| திதி | : | சப்தமி |




**மேடம்**
கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் வந்து நீங்கும். விழிப்புணர்வு தேவைப் படும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் உள்ளவர்களிடம் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கை யாளர்கள் ஆவார்கள். உயர் அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். உற்சாகமான நாள்.

**மிதுனம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். புதுஇடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். சாதிக்கும் நாள்.

**கடகம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய மாற்றம் ஏற்படும்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் இரண்டு மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும். மறைமுக விமர்சனங்கள் வந்து போகும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டும்.

**கன்னி**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். எல்லோரும் மதிப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**துலாம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உங்கள் கை ஓங்கும். அமோகமான நாள்.

**விருட்சிகம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**தனுசு**
கடந்த கால சுகமான அனுபவங்கள் எல்லாம் மனதில் நிழலாடும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**மகரம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரம் செழிக்கும். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள் . தைரியம் கூடும் நாள்.

**கும்பம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். புது முடிவுகள் எடுப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகளுடன் பனிப்போர்வந்து நீங்கும். திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

# பா. ஜ. க. அரசை கண்டித்து தி. மு. க. இன்று ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூலை 27

பட்ஜெட்டில் தமிழகத்தை வஞ்சித்த மத்திய பா. ஜ. க. அரசை கண்டித்து மாவட்ட தலைநகரங்களில் இன்று ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று தி. மு. க. அறிவித்துள்ளது.

இது குறித்து அந்தக் கட்சி வெளியிட்ட அறிக்கையில், நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கும் தமிழகம் போன்ற மாநிலங்கள் மீது வன்மத்தை கக்கும் வகையில் மத்தியில் ஆளும் மோடி தலைமையிலான பா. ஜ. க. அரசின் பட்ஜெட் அமைந்துள்ளது.

மெட்ரோ ரயில் திட்டம் மற்றும் தமிழகம் சந்தித்த 2 பேரிடர் இழப்புகளுக்கு நிதி வழங்க வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் முன்வைத்த கோரிக்கைகள் முற்றிலுமாக புறக்கணிக்கப்பட்டு, சில மாநிலங்களுக்கு மட்டும் பேரிடர் நிதி அள்ளி வழங்கப்பட்டுள்ளது.

பட்ஜெட்டில் மாற்றாந்தாய் மனப்பாங்குடன் தமிழகத்தை வஞ்சித்த மத்திய பா. ஜ. க. அரசை இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு மாவட்ட தலைநகரங்களில் தி. மு. க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப் படும் என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# "பிரதமர் மோடிக்கு எதிராக கறுப்பு கொடி போராட்டம்"

சென்னை, ஜூலை 27

பிரதமர் நரேந்திர மோடி தமிழகத்துக்கு வந்தால் கறுப்புக் கொடி காட்டுவோம் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தெரிவித்தார்.

மத்திய பட்ஜெட்டில் தமிழகம் புறக்கணிக்கப்பட்டுள்ளதைக் கண்டித்து, இந்திய கம்யூனிஸ்ட் சார்பில் சென்னை, அண்ணாசாலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற கட்சி நிர்வாகிகள், மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் அவர் முகம் மாதிரி கொண்ட முகமூடியை அணிந்து, அல்வா கிண்டுவது போல் எதிர்ப்பை பதிவு செய்தனர். தொடர்ந்து, வேலைவாய்ப்பின்மை மற்றும் பட்ஜெட்டில் தமிழகம் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டதற்கு எதிரான முழக்கங்களை எழுப்பினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் முத்தரசன் கூறுகையில், பாராளுமன்றம் கூடுவதற்கு முன்னதாக பேட்டியளித்த பிரதமர், கட்சி அரசியலைக் கடந்து பாராளுமன்றத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார். ஆனால், தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டோ பிரதமரின் கருத்துக்கு நேர்மாறான முறையில் அமைந்துள்ளது. தேச விரோத பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தமிழகம், தெலங்கானா உள்ளிட்ட மாநிலங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

தமிழகம் மீதான இந்த நிலைமையை பா. ஜ. க. அரசு மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், மோடி தமிழகத்துக்குள் வந்தால் கறுப்புக் கொடி காட்ட வேண்டிய கட்டாயம் ஏற்படும். அவர் தமிழகத்தை புறக்கணிக்கும்போது, அவர் எங்களுக்கான பிரதமரும் அல்லர்- என்றார். (எ)

# சிரேஷ்ட அமைச்சர்களுக்குத்தான் துணை முதல்வர் பதவி வழங்குக

## தே. மு. தி. க. பொதுச் செயலாளர் பிரேமலதா

பூந்தமல்லி, ஜூலை 27

தி. மு. கவில் உள்ள சிரேஷ்ட அமைச்சர்களுக்கே துணை முதல்வர் பதவியை முதல்வர் ஸ்டாலின் வழங்க வேண்டும் என்று தே. மு. தி. க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்தார்.

மின்சாரக் கட்டண அதிகரிப்பை கண்டித்தும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் தமிழகம் முழுவதும் தே. மு. தி. க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. பூந்தமல்லி பகுதியில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பிரேமலதா கலந்துகொண்டார். ஆர்ப்பாட்டத்தில், தமிழக அரசு மின் கட்டண உயர்வை திரும்பப் பெற வலியுறுத்தி கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன.



ஆர்ப்பாட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த பிரேமலதா மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதேவேளை, முதல்வர் நல்ல உடல்நிலை ஆரோக்கியத்துடன் இருந்தால் தான், மக்களுக்கு நன்மை செய்ய முடியும். எனவே, தி. மு. கவில் உள்ள சிரேஷ்ட அமைச்சர்களுக்கு துணை முதல்வர் பதவியை வழங்க வேண்டும் என்று தே. மு. தி. க. சார்பில் கேட்டுக் கொள்கிறோம் என்றும் கூறினார். (எ)

# உள்ளூராட்சித் தேர்தலுக்கு அனைவரும் தயாராகுங்கள்

## அ. தி. மு. க. நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தல்

சென்னை, ஜூலை 27

அ. தி. மு. கவினர் அனைவரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு தயாராக வேண்டும் என்று கட்சி நிர்வாகிகளுக்கு பொதுச் செயலாளர் பழனிச்சாமி அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ. தி. மு. க. தலைமை அலுவலகத்தில் கட்சி நிர்வாகிகளுடன் பழனிச்சாமி ஆலோசனை நடத்தினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (எ)

# "எங்கு அணை கட்டினாலும் எதிர்ப்போம்"

சென்னை, ஜூலை 27

காவிரி விவகாரத்தில் தமிழக முதல்வர், கர்நாடக முதல்வருடன் பேச மாட்டார். காவிரியில் கர்நாடக அரசு எங்கு அணை கட்டினாலும் எதிர்த்தே தீருவோம் என்று மத்திய நீர்வளத்துறை அமைச்சரை சந்தித்த பிறகு தமிழக அமைச்சர் துரை முருகன் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியலமைப்பு பேரவைக்கு எதிராக ஒருவர் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யலாம்

### சபையில் ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூலை 27**

**21 ஆவது திருத்தத்தின் பிரகாரம் அரசியலமைப்புப் பேரவைக்கு எதிராக ஒருவரினால் அடிப்படை உரிமை மனுதாக்கல் செய்யமுடியும் என எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**



பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பாக பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசியலமைப்பு பேரவை நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு பகுதியாகும் என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

21 ஆவது திருத்தத்தின் பிரகாரம் அரசியலமைப்பு பேரவைக்கு எதிராக ஒருவரினால் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யமுடியும்.

19 ஆவது திருத்தத்திலும் இந்த விடயம் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. அவ்வாறாயின் நிறைவேற்று அதிகாரம் ஊடாக மேற்கொள்ளப்படும் தீர்மானத்துக்கு எதிராக அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யமுடியும்.

பொலிஸ் மா அதிபரை ஜனாதிபதியே நியமித்தார். இந்த நியமனமானது அரசியலமைப்பின் அதிகாரத்தினை மீறும் செயலாகும் என உயர்நீதிமன்றம் அறிவித்திருந்தது. அரசாங்கம் இந்த தீர்ப்பை நடைமுறைப்படுத்தவேண்டும்-என்றார்.

(அ)

## தோல்விக்கு அஞ்சியே தேர்தலை பிற்போடுவதற்கு ரணில் முயற்சி!

### விஜித ஹேரத் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 27

தோல்விக்கு அஞ்சியே அரசாங்கம் தேர்தலைப் பிற்போட முயற்சி செய்கின்றது என தேசிய மக்கள் சக்தியின் பிரசார செயலாளரும், கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுமக்கள் ஜனாதிபதித் தேர்தலையே எதிர்ப்பார்த்துள்ளனர். ஆனால் அரசாங்கம் தேர்தலை பிற்போடும் முயற்சியிலேயே உள்ளது.

அரசாங்கம் மீது மக்களுக்கு காணப்படும் நம்பிக்கையின்மை நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே செல்கின்றது.

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு தேர்தலை அறிவிப்பதற்கான அதிகாரம் கிடைத்துள்ளது. எனவே ஆணைக்குழு இனியும் பின்வாங்காமல் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேர்தல் தோல்விக்கு அஞ்சியே ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க தேர்தலை பிற்போடுவதற்கான சதித்திட்ட முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றார்-என்றார்.

(அ)

## கைதி நடத்திய தாக்குதலில் காயமடைந்த 2 சிறை அதிகாரிகள் வைத்தியசாலையில்!

கொழும்பு, ஜூலை 27

போகம்பரை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் நடத்திய தாக்குதலில் காயமடைந்த இரண்டு சிறைச்சாலை அதிகாரிகள் கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கல்முனை மேல் நீதிமன்றில் இடம்பெறும் வழக்கொன்றுக்காகக் குறித்த சந்தேகநபர் சிறைச்சாலை அதிகாரிகளால் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது, இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் காமினி பி. திசாநாயக்க தெரிவித்தார்.

உடுதும்பர பகுதியில் வைத்து இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் காயமடைந்த இரு சிறைச்சாலை அதிகாரிகளும் உடுதும்பர ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கண்டி தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

(அ)

## சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசு பொறுப்புடன் நடக்கவேண்டும்!

### எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 27

நாட்டில் சட்டம் நடைமுறைப்படுத்துப்படுவதில் ஜனாதிபதி உட்பட அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டில் ஜனநாயக உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.

அவரவரின் அரசியல் தேவைகளுக்கேற்ப அரசியலமைப்பினையோ அல்லது நாட்டின் சட்டங்களையோ மாற்றுவதற்கு இடமளிக்க முடியாது.

நீதிமன்றத்தினால் ஒரு தீர்ப்பு வழங்கப்படும்போது அதனை நடைமுறைப்படுத்தவேண்டிய கடப்பாடு காணப்படுகின்றது.

நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரமே தீர்ப்பு வழங்கப்படுகின்றது. எனவே நீதிமன்ற தீர்ப்பை கேள்விக்குட்படுத்த முடியாது. சட்டம் நாட்டின் பிரதான தூண்களில் ஒன்றாகும். பொலிஸ் மா அதிபருக்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டதனை பலரும் விமர்சித்து வருகின்றன.

பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பான தீர்ப்பு தொடர்பாக இரண்டு நாட்களில் ஆழமாக பரிசீலிக்கவேண்டும் என அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது-என்றார்.

(அ)

## விக்கிரமபாகு கருணாரத்னவின் இறுதிக் கிரியைகள் இன்று!

கொழும்பு, ஜூலை 27

காலஞ்சென்ற சிரேஷ்ட இடதுசாரி அரசியல் தலைவரும், புதிய சம சமாஜ கட்சியின் தலைவருமான கலாநிதி விக்ரமபாகு கருணாரத்னவின் இறுதிக் கிரியைகள் இன்று சனிக்கிழமை பொரளை கனத்தை பொது மயானத்தில் இடம்பெறவுள்ளது.

உடல் நலக்குறைவால் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று முன் தினம் அதிகாலை, தனது 81ஆவது வயதில் அவர் காலமானதாக உறவினர்கள் அறிவித்தனர்.

நேற்றுக் காலை 8 மணிமுதல் இரவு 10 மணிவரையும், இன்று காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரையிலும் அன்னாரின் பூதவுடல் பொது மக்களின் அஞ்சலிக்காக கொழும்பு பொரளையில் அமைந்துள்ள ஏ. எப். ரேமண்ட் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டுள்ளதாக புதிய சம சமாஜ கட்சி அறிவித்துள்ளது.

1943ஆம் ஆண்டு மார்ச் மாதம் 08ஆம் திகதி பதுளையில் பிறந்த விக்ரமபாகு கருணாரத்ன, தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகள் குறித்து எப்போதும் ஒரே கொள்கையுடன் செயற்பட்டு வந்ததோடு, அது தொடர்பான போராட்டங்களில் முன்னிலை வகித்து வந்தார்.

சிலோன் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பட்டதாரியான விக்ரமபாகு கருணாரத்ன, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டத்தை பெற்றுள்ளார்.

சுமார் 18 வருடங்கள் பேராதனை பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும் அவர் கடமையாற்றியுள்ளார்.

(அ)

## நேர்முகப் பரீட்சைக்குச் சென்ற இளைஞன் ரயிலுடன் மோதி பலி!

கொழும்பு, ஜூலை 27

நேர்முகப் பரீட்சைக்குச் செல்வதாகக் கூறி பாணந்துறை நகரத்திற்குச் சென்ற இளைஞன் ஒருவர் ரயிலுடன் மோதி உயிரிழந்துள்ளதாக பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை, எலுவில பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞரொருவரே உயிரிழந்துள்ளார்.

இந்த இளைஞர் நேர்முகப் பரீட்சைக்குச் செல்வதாகக் கூறி வீட்டிலிருந்து வெளியே சென்ற நிலையில் பாணந்துறையிலிருந்து மருதானை நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இளைஞரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

(அ)

## சஜித்துடனான ஒப்பந்தம் குறித்து ஆராய 2ஆம் திகதி கூடும் முற்போக்கு கூட்டணி!

கொழும்பு, ஜூலை 27

ஓகஸ்ட் 2ஆம் திகதி கொழும்பில் நேரடியாகவும், மெய்நிகர் மூலமாகவும் தமிழ் முற்போக்கு கூட்டணி அரசியல் குழு கூட்டம் நடைபெறும். இதன்போது செப்ரெம்பர்-21 ஜனாதிபதி தேர்தல் தொடர்பில், ஆராயப்பட்டு அதிகாரபூர்வ தீர்மானங்கள் எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேச ஐக்கிய மக்கள் கூட்டணி அரசாங்கத்தில் நடைபெற வேண்டும் என்ற நோக்கில், தமிழ் முற்போக்கு கூட்டணி பிரதிநிதித்துவம் செய்யும் மக்கள் நலன் சார்ந்து ஏற்கனவே செய்து கொண்டுள்ள சமூக நீதி உடன்படிக்கையை மேலும் தரமுயர்த்துவது,

அதன் சாராம்சங்களை ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம் பெற செய்வது, ஐக்கிய மக்கள் கூட்டணியில் சட்டபூர்வமாக இணைவது தொடர்பாக, ஐக்கிய மக்கள் கூட்டணியின் நகல் யாப்பை ஆராய்வது, இதையடுத்து இடம் பெற கூடிய பாராளுமன்ற தேர்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில், அரசியல் குழுவில் காத்திரமாக ஆராயப்படும் என கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

மேலும், தமிழ் முற்போக்கு கூட்டணி பங்கு பெறுகின்ற எமது அரசாங் கம் விரைவில் உருவாகும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

த.மு.கூட்டணி, வெறும் வாய் பேச்சில் காலத்தை கடத்தும் கட்சி அல்ல, என்பதை நாம் எமது முதல் கட்ட 2015-2019 நல்லாட்சி காலத்திலேயே நிரூபித்து உள்ளோம். அன்று நாம் ஆரம்பித்து வைத்த பல முற்போக்கு பணிகள் இன்று நின்று போயுள்ளன. அவற்றை மீள ஆரம்பிக்க நாம் மீள ஆட்சிக்கு வர வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம்.

வாழ்வாதார காணி உரிமை, வதிவிட வீட்டு காணி உரிமை, இடைகால சம்பளம், கல்வி, சுகாதாரம் ஆகிய அனைத்து துறைகளிலும் மறுமலர்ச்சியை தமுகூட்டணி ஏற்படுத்தும். இந்த அரசு மலையக பெருந்தோட்ட மக்கள் மத்தியில், நாள் சம்பளம், இந்திய நன்கொடை வீடமைப்பு திட்டத்துக்கு காணி வழங்கல், சுயமாக வீடு கட்டி கொள்ள காணி வழங்கல் ஆகிய மூன்று முக்கிய துறைகளிலும் படுதோல்வி அடைந்து விட்டது.

எமது ஆட்சியில் மலைநாட்டு பெருந்தோட்ட மாவட்டங்களில் தனி வீடுகளை அமைக்க இந்திய வீட்டு திட்டத்துக்கு நாம் தடை இன்றி காணி வழங்குவோம். தவிர சுயமாக சொந்த வீடுகளை கட்டிக்கொள்ளவும் காணி வழங்குவோம். உழைத்து வாழ கொழும்பு உட்பட மாநகரங்களில் குடியேறி, இன்று வாடகை வீடுகளில் வாழும் மக்களுக்கு தொடர்மாடி மனைகளை வழங்குவோம்.

இந்த கொள்கைகள் தொடர்பிலும், ஓகஸ்ட் 2ஆம் திகதி தமிழ் முற்போக்கு கூட்டணி தீர்மானங்களை எடுக்கும் - என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துறைகளுக்குள் முரண்பாடு கூடாது!

## முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய



கொழும்பு, ஜூலை 27

**தேர்தல் காலங்களில் நீதித்துறை, நிறைவேற்றுத்துறை, பாராளுமன்றத்துக்கிடையில் மோதல்களைத் தவிர்ப்பது முக்கியமானது என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.**

பொலிஸ்மா அதிபர் தொடர்பில் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால தடையுத்தரவை ஏற்றுக் கொள்ள முடியாது என பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று வெள்ளிக்கிழமை காலை பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.

தேர்தல் தொடர்பிலும், பொலிஸ் மா அதிபர் விவகாரம் தொடர்பில் பல தரப்பினராலும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்ற நிலையிலேயே முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய தனது எக்ஸ் பக்கத்தில் செய்துள்ள பதிவில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் காலங்களில் நீதித்துறை, நிறைவேற்றுத்துறை, பாராளுமன்றத்துக்கிடையில் மோதல்களைத் தவிர்ப்பது முக்கியம். சுயநலத்தை விட நாட்டின் எதிர்காலம் முக்கியமானது கருஜயசூரிய வலியுறுத்தியுள்ளார். (அ)

# வீடொன்றில் மறைத்து வைத்த பெருந்தொகை மஞ்சள் மீட்பு!

## ஐவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஜூலை 27

கற்பிட்டி - பள்ளிவாசல் துறை பகுதியில் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்டு வீடொன்றில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கற்பிட்டி பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஐவரும் 35 இற்கும் 42 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும் இவர்கள் பள்ளிவாசல்துறை மற்றும் குறிஞ்சிப்பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் கூறினர்.

கற்பிட்டி பொலிஸ் விசேட பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் பள்ளிவாசல் துறை கிராம சேவகர் பிரிவுக்குற்பட்ட வெள்ளங்கரை பிரதேசத்தில் கற்பிட்டி பொலிஸாருடன் இணைந்து பொலிஸ் விசேட பிரிவினர் சோதனை ஒன்றினை மேற்கொண்டனர்.

இதன்போது, வீடொன்றில் சட்டவிரேதமாகக் கொண்டுவரப்பட்டு சூட்சுமமான முறையில் 20 மூடைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 860 கிலோ 250 கிராம் மஞ்சள் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட மஞ்சள் சுமார் 17 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடையது எனவும் பொலிஸார் கூறினர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# உடலில் விஷம் கலப்பதனால் வருடத்திற்கு 1000 பேர் மரணம்!

கொழும்பு, ஜூலை 27

உடலில் விசம் கலப்பதனால் வருடத்திற்கு சுமார் 1000 பேர் வரை உயிரிழப்பதாக தேசிய வைத்தியசாலையின் விஷ தகவல் நிலையத்தின் பிரதானி வைத்தியர் ரவி ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு, அவர் இதனைக் குறிப்பிட்டார்.

உடலில் விசம் கலந்ததன் காரணமாக வைத்தியசாலைகளுக்கு அனுமதிக்கப்படுபவர்களைக் காப்பாற்ற வைத்தியர்கள் முயற்சிக்கின்றனர்.

எனினும் உடலில் கலந்த விசம் என்னவென்பது தொடர்பில் அறியாததன் காரணமாக அவர்களுக்குரிய சிகிச்சைகளை உடனடியாக வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக அவர்கள் உயிரிழப்பதாகத் தேசிய வைத்தியசாலையின் விச தகவல் நிலையத்தின் பிரதானி வைத்தியர் ரவி ஜயவர்தன கூறினார். (அ)

# மருத்துவ விநியோகப் பகுதியின் முன்னாள் பணிப்பாளருக்கு பிணை

கொழும்பு, ஜூலை 27

தரமற்ற மனித இம்யூனோகுளோபுலின் தடுப்பூசிகளை கொள்வனவு செய்தமை தொடர்பில் 8 மாதங்களுக்கும் மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மருத்துவ விநியோகப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் டாக்டர் கபில விக்கிரமநாயக்கவை தகுந்த பிணை நிபந்தனைகளுடன் விடுவிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன் தினம் உத்தரவிட்டுள்ளது.

கபில விக்கிரமநாயக்கவினால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்னவின் இணக்கப்பாட்டுடன் நீதியரசர் சசி மகேந்திரன் இந்தத் தீர்மானத்தை அறிவித்தார்.

நீதிபதி மகேந்திரன் தீர்ப்பை வழங்குகையில், டாக்டர் விக்கிரமநாயக்கவை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைப்பதற்கான போதிய காரணங்களை பிரதிவாதிகள் நிரூபிக்கத் தவறியதாகத் தெரிவித்தார்.

சம்பவத்தின்போது மருத்துவர் வெளிநாட்டில் இருந்ததாகவும் அவருக்கு எதிராக புதிய ஆதாரங்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லை என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

டாக்டர் விக்கிரமநாயக்க எட்டு மாதங்களுக்கும் மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பதையும், அதனால், அவர் தொடர்ந்து தடுத்து வைக்கப்படுவதற்கு போதிய காரணங்கள் எதுவும் இல்லை எனவும் நீதிமன்றம் ஒப்புக்கொண்டது. இதனையடுத்து, சட்டமா அதிபர் மற்றும் ஏனைய பிரதிவாதிகள் முன்வைத்த பூர்வாங்க ஆட்சேபனைகளை நிராகரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்ததுடன், விக்கிரமநாயக்கவை தகுந்த பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிட்டது.

எவ்வாறாயினும், விக்கிரமநாயக்கவுக்கு எதிரான மேலதிக விசாரணைகள் அல்லது புதிய சாட்சியங்களை முன்வைப்பதற்கு இந்த பிணை உத்தரவு தடையாக இருக்காது என நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது.

தரமற்ற மனித இம்யூனோகுளோபுலின் தடுப்பூசிகளை கொள்வனவு செய்தமை தொடர்பான வழக்கு முடியும் வரை தன்னை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை சவாலுக்கு உட்படுத்தி டாக்டர் கபில விக்கிரமநாயக்கவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது. மாளிகாகந்த நீதவான், மாளிகாகந்த நீதவான் நீதிமன்றப் பதிவாளர், பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக இருந்தனர்.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணி சனத் விஜேவர்தனவின் உத்தரவின் பேரில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா மற்றும் சரத் ஜயமான்ன ஆகியோர் ஆஜராகியிருந்தனர். சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நிர்மலன் விக்னேஷ்வரன் மற்றும் அரச சட்டத்தரணி லக்மினி கிரிஹாகம ஆகியோர் ஆஜராகினர். (அ)

# சிறையில் இருந்து தப்பிய பெண் கைதி

கொழும்பு, ஜூலை 27

வீரவில திறந்தவெளி சிறைச்சாலையில் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த பெண் சிறைகைதி ஒருவர் தப்பிச் சென்றுள்ளதாக வீரவில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிரிந்தி ஓயா பயிர்ச்செய்கை பிரிவில் பணிபுரிந்த போதே குறித்த பெண் சிறைச்சாலை அதிகாரிகளின் பிடியில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் கூறினர்.

கடந்தோலை, பொல்கஹத்தன்ன பிரதேசத்தில் வசிக்கும் இந்த பெண் ஹெரோய்ன் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஆறு மாத சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்றார்.

தப்பியோடிய நபரை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை வீரவில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நிறைவேற்றுத்துறைக்கு அவசியமான விதத்தில் தீர்ப்பளிக்கும் கடப்பாடு நீதிமன்றுக்கு கிடையாது

## ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் குமரப்பெரும

கொழும்பு, ஜூலை 27

நிறைவேற்றுத்துறைக்கு அவசியமான விதத்தில் தீர்ப்பளிப்பதற்கான கடப்பாடு நீதிமன்றத்திற்கு கிடையாது. நிறைவேற்றுத்துறையினால் நீதித்துறைக்கு எதிராக ஒரு விதமான குழப்ப நிலையை உருவாக்குவதற்குக் கடந்த காலப்பகுதியில் முயற்சி செய்யப்பட்டது என ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் குமரப்பெரும தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் சட்டத்தரணிகள் ஊடக சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் குமரப்பெரும-

நிறைவேற்றுத்துறையினால் நீதித்துறைக்கு எதிராக ஒரு விதமான குழப்ப நிலையை உருவாக்குவதற்குக் கடந்த காலப்பகுதியில் முயற்சி செய்யப்பட்டது.

பாராளுமன்றத்தில் ஜனாதிபதி விடுத்த கூற்று குறிப்பாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். இலங்கைக்கு உயர்நீதிமன்றமொன்று தேவையில்லை என்று கூறப்படுகிறது? அப்படியில்லாவிட்டால் நீதிமன்ற முறைமையை வேண்டாம் என்பதா? நிறைவேற்றுத்துறைக்கு அவசியமான வகையில் தீர்ப்புகளை அளிப்பதற்கான கடப்பாடு நீதிமன்றத்திற்கு கிடையாது.

அரசியலமைப்புக்கான 17 ஆவது திருத்தத்தின் பின்னர் தோன்றிய வளர்ச்சிகளுடன் அரசியலமைப்பு திருத்தப்பட்டது. நீதிமன்றங்களுக்கு நீதியரசர்களை நியமிக்கின்ற நிறுவனமாக அரசியலமைப்பு சபை ஒரு சுயாதீனத்தன்மை மிக்க நிறுவனம் என்ற வகையிலேயே பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் விதப்புரையை அரசியலமைப்பு பேரவை அங்கீகரிக்கவில்லை. சட்டவாக்கத் துறை, நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை ஆகிய மூன்று நிறுவனங்களாகப் பிரிக்கப்பட்ட வழியுரிமையொன்று இருக்கிறது.

எனினும் அவசரமாக நடத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு சம்பந்தமாக ஆழமாக ஆராய்ந்து அமைச்சரவையின் தீர்மானத்தை அறிவிப்பதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நீதித்துறை தத்துவத்தை அமைச்சரவையோ பாராளுமன்ற தெரிவு குழுவோ மீளாய்வு செய்ய முடியுமென்பதற்கான ஏற்பாடுகள் அரசியலமைப்பில் கிடையாது. இது நீதித்துறை மீதான அப்பட்டமான அழுத்தம் கொடுத்தலாகும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் விதிகளை நடைமுறைப்படுத்த தயாராகும் தேர்தல்கள் ஆணைக்குழு

## 30 இற்கு மேற்பட்ட நிகழ்ச்சிகள் நிறுத்தம்

கொழும்பு, ஜூலை 27

**சுதந்திரமான தேர்தலுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அரசியல் தலைமீடுகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுமார் 30 உற்சவங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

ஆணைக்குழுவுக்கு கிடைத்த முறைப்பாடுகளின் பிரகாரம் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அரசியல் தலையீடு காரணமாக வாக்காளர்களுக்கு நியமனம் வழங்கல், பொருட்கள் விநியோகம் போன்ற பல திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஜனாதிபதி தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர், உத்தியோகபூர்வ குழுக்கள் இவ்விடயத்தில் கடுமையாக செயற்படத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரித்வித்தார்.

மேலும் தேர்தல் ஆணைக் குழுவினால் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கு அனைத்து வேட்பாளர்களும் உத்தரவுகளை பின்பற்ற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

(அ)

# அபிவிருத்திசார் கூட்டங்கள் நடத்துவதற்கு தேர்தல் அறிவிப்பு இடையூறாக அமையாது!

## அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்



கிளிநொச்சி, ஜூலை 27

தேர்தல் அறிவிப்பு அபிவிருத்திசார் கூட்டங்களை நடத்துவதற்கு இடையூறாக அமையாது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற திட்ட மீளாய்வுக் குழு கூட்டத்தின்போது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் வர்த்தமானி வெளியிடப்பட்டது. இன்று நடக்கும் கூட்டம் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவிடம் கேட்டேன்.

எந்தவொரு வேட்பாளைரையும் ஆதரித்தோ அல்லது வேறு ஒரு வேட்பாளருக்கு எதிரான கருத்துக்களையோ வெளியிடக் கூடாது என தெரிவிக்கப்பட்டது.

அதுவரை, எந்தவொரு விடயத்திலும் அவர்கள் தலையிட மாட்டார்கள்.

இருளில் இருந்து நாட்டை மீட்ட தற்போதைய ஜனாதிபதியின் திட்டங்களுக்கு நாம் ஒத்துழைக்க வேண்டும்-என்றார்.

(அ)




# விபத்தில் சிக்கிய சொகுசு பஸ்

கொழும்பு, ஜூலை 27

கொழும்பில் இருந்து மன்னார் நோக்கி பயணித்த தனியார் சொகுசு பஸ் புத்தளம் காக்காபள்ளிய பாதையில் விபத்துக்குள்ளாகியது.

குறித்த விபத்து நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுளள்ளது.

குறித்த பாதையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது

விபத்தின்போது பஸ்ஸில் பயணித்தவர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

எனினும் எரிபொருள் நிரப்பும் இயந்திரத்தின் மேற்பகுதியும் பஸ்ஸின் பகுதியளவில் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# ராஜபக்ஷக்களைப் பாதுகாக்கவே முஸ்லிம்களிடம் மன்னிப்பு கோரல்

## மரிக்கார் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 27

கோவிட் தொற்றில் மரணித்த முஸ்லிம் பிரஜைகளின் சடலங்களை எரித்த குற்றச்செயலில் இருந்து ராஜபக்சவினரை பாதுகாத்து அதிகாரிகள் மீது குற்றம் சுமத்தவே தற்போது அமைச்சரவை முஸ்லிம் சமூகத்திடம் மன்னிப்பு கோர தீர்மானித்திருக்கிறது என பாராளுமன்ற உறுப்பினர் மரிக்கார் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோவிட் தொற்றில் மரணித்த முஸ்லிம் பிரஜைகளின் சடலங்களை எந்தவித விஞ்ஞான ரீதியிலான தீர்மானமும் இல்லாமல் எரிப்பதற்கு ராஜபக்ச அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.

அந்த அரசாங்கத்தின் இந்த தீர்மானத்தால் ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகமும் மிகவும் வேதனை அடைந்தது. இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இன்னும் அதன் வேதனையை உணர்ந்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் அரசாங்கம் வெறுமனே முஸ்லிம் மக்களிடம் மன்னிப்பு கோரி இதில் இருந்து தப்பிக்கொள்ள முடியும் என நினைப்பது அரசாங்கத்தின் முட்டாள்தனமான விடயம்.

ராஜபக்சக்களை இந்த குற்றத்தில் இருந்து பாதுகாத்து அதிகாரிகள் மீது பழி சுமத்தவே அரசாங்கம் திடீரென இவ்வாறான தீர்மானம் ஒன்றை எடுத்திருக்கிறது.

அப்படியானால் சடலங்களை எரிப்பதற்கு அதிகாரிகள் விஞ்ஞான ரீதியில் அல்லாமல் ஆலாசேனை வழங்கி இருந்தால், அந்த தீர்மானத்தை எடுத்தவர்கள் யார். அப்போது அமைச்சரவையில் இருந்தவர்கள் ஏன் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் இருந்தார்கள்?.

அதனால் இடம்பெற்ற சம்பவத்துக்காக முஸ்லிம் மக்களிடம் மன்னிப்பு கோரி, தேர்தலில் முஸ்லிம்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ளலாம் என்று அரசாங்கம் நினைத்துக் கொண்டிருக்கிறது.

பாதிக்கப்பட்ட முஸ்லிம் வேதனையை இந்தளவு குறைத்து மதிப்பிட வேண்டாம். அதற்கான நட்டஈடு அரசாங்கத்துக்கு கிடைக்கும்-என்றார்.

(அ)

# வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் 2பேர் விமான நிலையத்தில் கைது

கொழும்பு, ஜூலை 27

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 45 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் இருவரும் கொண்டு வந்த பயணப்பொதிகளிலிருந்து 41,400 வெளிநாட்டு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் பொலனறுவை பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞரொருவர் என்பதுடன், இவர் தனது உறவினரொருவரை சந்திப்பதற்காகத் டுபாய்க்குச் சென்று மீண்டும் நாடு திரும்பும் போது சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மற்றைய சந்தேக நபர், கொழும்பு தலவத்துகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய நபரொருவர் என்பதுடன், இவர் டுபாய்க்குச் சென்று மீண்டும் நாடு திரும்பும் போது சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

(அ)

# சர்வஜன கூட்டணி வேட்பாளர் ஓகஸ்ட் 4 ஆம் திகதி அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 27

கடும் போக்குடைய சிங்கள தேசியவாத கட்சிகளும், அமைப்புகளும் அங்கம் வகிக்கும் சர்வஜனக் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் எதிர்வரும் ஓகஸ்ட் 4 ஆம் திகதி பெயரிடப்படவுள்ளார்.

மேற்படி கூட்டணியில் அங்கம் வகிக்கும் பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

"ஜனாதிபதி தேர்தல் மற்றும் வேட்பாளர் தொடர்பில் தீர்மானிக்க எதிர்வரும் 4 ஆம் திகதி விசேட கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக் கூட்டத்திலேயே முடிவு எடுக்கப்படும்." - எனவும் அவர் கூறினார்.

அதேவேளை, தற்போதைய பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பஸில் வசம் அல்ல, ரணில் விக்கிரமசிங்க வசமே உள்ளது எனவும் கம்மன்பில குறிப்பிட்டார்.

(அ)

# தனக்கு தேவையான ஒருவரை ஜனாதிபதி நியமிக்க முடியாது

## பொலிஸ்மா அதிபர் விடயம் குறித்து ஹக்கீம்

கொழும்பு, ஜூலை 27

தனக்கு தேவையான ஒருவரை பொலிஸ் மா அதிபராக நியமிக்க ஜனாதிபதி மேற்கொண்ட முயற்சிக்கு, சபாநாயகர் இடமளிக்கக்கூடாது என பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பொலிஸ் மா அதிபர் விவகாரம் தொடர்பாக பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

அரசமைப்புச் சபை என்பது நாடாளுமன்றத்தின் ஒரு பகுதி என்று பிரதமர் இங்கே உரையாற்றினார்.

ஆனால், ஜனாதிபதியோ அரசமைப்புச் சபை என்பது நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு பகுதி என்று கூறியிருந்தார்.

அரசமைப்புச் சபையின் தலைவராக சபாநாயகர் எடுத்த தீர்மானத்தை கேள்விக்கு உட்படுத்திதான், உயர்நீதிமன்றம் இந்த வழக்கை எடுத்துக்கொண்டது.

தனக்கு தேவையான ஒருவரை பொலிஸ் மா அதிபராக நியமிக்க ஜனாதிபதி மேற்கொண்ட முயற்சிக்கு, சபாநாயகர் இடமளிக்கக்கூடாது-என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை காந்திபுர மக்களுக்கு காணி உரிமை

## ஏழு தசாப்தகால ஏக்கம் தீர்ந்தது





திருகோணமலை, ஜூலை 27

**திருகோணமலை, காந்திபுரத்தில 157 குடும்பங்கள் கடந்த ஏழு தசாப்தங்களா (70 வருடங்கள்) காணி உரிமைகளை இழந்து தற்காலிக குடியிருப்புகளில் வாழ்ந்து வந்த நிலையில் அவர்களுக்கு காணி உரிமையை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பெற்றுக்கொடுத்துள்ளார்.**

இந்த மக்கள் கடந்த 70 வருடங்களாக எதிர்நோக்கி வரும் காணிப் பிரச்னைகள் தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தார்.

காணி உரிமைகள் அற்ற இந்த 157 குடும்பங்களும் நம்பிக்கையிழந்து தற்காலிக இருப்பிடங்களில் வாழ்ந்து வருகின்றன.

இது தொடர்பில் தனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதையடுத்து, முன்னுரிமை நடவடிக்கையாக நிரந்தரத் தீர்வை வழங்குமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்து தற்போது காணி உரிமையையும் பெற்றுக் கொடுத்துள்ளதாக ஆளுநர் செந்தில் தொண்டமான் கூறியுள்ளார்.

காணி உரிமை பெற்றுக் கொடுக்கும் இந்த நிகழ்வில் பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் மதிவாணன், முன்னாள் பிரதேச செயலாளர் தனேஸ்வரன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் பாஸ்கரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(எ)


# மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு


சாய்ந்தமருது, ஜூலை 27

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டல் மற்றும் நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் எம். ஐ. எம். இல்யாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இப்பாடசாலையின் பழைய மாணவரும் தென் கிழக்கு பல்கலைக்கழக பொறியியற் பீட விரிவுரையாளருமான ஏ. எம். அஸ்லம் ஸஜா, கௌரவ விருந்தினராக பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் செயலாளரும் கல்முனை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் செயல் திட்ட பொறியியலாளருமான எம். ஐ. எம். றியாஸூம் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது, விருந்தினர்களால் மாணவத் தலைவர்களுக்கும் வகுப்புத் தலைவர்களுக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கி சின்னங்களும் சூட்டப்பட்டன.





# விழிப்புணர்வு நடைபவனி

பொத்துவில், ஜூலை 27

"சுதந்திரமான ஒரு நாட்டை கட்டியெழுப்புவோம்" எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு நடைபவனி ஒன்றை பேருவளையைச் சேர்ந்த எம். எஸ். எம். சஹ்மி கடந்த 13ஆம் திகதி பேருவளை நகரில் இருந்து தனது நடைபவனியை ஆரம்பித்தார்.

கடந்த 12 நாட்களாக காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, வெல்லவாய, மொனராகல, சியம்பலாண்டுவ ஊடக பொத்துவிலை நோக்கி வருகை தந்த சஹ்மியை வியாழக்கிழமை காலை பொத்துவில் அறுகம்பை பிரதேசத்தில் வைத்து அறுகம்பை ஓட்டோ உரிமையாளர்கள் சங்கத்தினர் வரவேற்றனர்.

பொத்துவிலில் இருந்து அக்கரைப்பற்று வழியாக மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் வந்து மன்னார் வழியாக அநுராதபுரம், புத்தளம் ஊடாக கொழும்பு, பேருவளை செல்லவுள்ளதாக சுதந்திர நாடு வேண்டி நடைபவனியில் ஈடுபட்டுள்ள சஹ்மி தெரிவித்தார்.

(எ)

# கல்முனை மாநகர சபைக்கு சுவர்ண புரவர தேசிய விருது

கல்முனை, ஜூலை 27

மாநகர சபைகளுக்கு இடையே நடத்தப்பட்ட செயல்திறன் மதிப்பீட்டில் கிழக்கு மாகாண மட்டத்தில் முதலிடத்தையும் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்ட கல்முனை மாநகர சபைக்கு சுவர்ண புரவர தேசிய விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற சுவர்ண புரவர தேசிய விருது விழாவின் போதே கல்முனை மாநகர சபைக்கு இவ்விருது வழங்கப்பட்டது.



உள்ளூராட்சி, மாகாண சபைகள் இராஜங்க அமைச்சர் ஜனக வக்கும்பர, அவுஸ்திரேலியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் உயர்ஸ்தானிகர்கள், உலக வங்கி மற்றும் ஆசியா பௌண்டேஷன் என்பனவற்றின் இலங்கைக்கான வதிவிடப் பிரிதிநிதிகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆகியோர் இணைந்து கல்முனை மாநகர ஆணையாளர் என். எம். நௌபீஸிடம் இவ்விருதை வழங்கி வைத்தனர்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரும் மாகாண முதலமைச்சு மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருமான என். மணிவண்ணன் மற்றும் கல்முனை மாநகர சபையின் சார்பில் உதவி ஆணையாளர் ஏ. எஸ். எம். அஸீம், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். எம். சாஹிர் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.


செயல்திறன் மதிப்பீட்டில் கல்முனை மாநகர சபையானது மாகாண மட்டத்தில் முதலிடத்தையும், தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் வென்று இந்த விருதை பெறுவதற்கு காரணமாக அமைந்த கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வர், முன்னாள் ஆணையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் ஆணையாளர் என். எம். நௌபீஸ் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துள்ளார்.

(எ)

# சாரண மாணவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு

மட்டக்களப்பு, ஜூலை 27

மட்டக்களப்பு, கல்லடி உப்போடை சிவானந்தா தேசிய கல்லூரி சாரண மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு, சுவாமி நடராஜன் ஞாபகார்த்த மண்டபத்தில் கல்லூரி அதிபர் எஸ். தயாபரன் தலைமையில் நடைபெற்றது.



கல்லூரியின் சாரண பொறுப்பாசிரியர் ரீ. ருத்திராகரன், சாரண மாணவர்களுக்கான சின்னங்களை சூட்டி வைத்தார்.

இந்த நிகழ்வில் கல்லூரியின் பிரதி அதிபர், உதவி அதிபர், மாவட்ட உதவி சாரண ஆணையாளர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அத்துடன் கல்லூரியின் பிரதி அதிபராக, சாரண பொறுப்பாசிரியராக கடமையாற்றி செங்கலடி மத்திய கல்லூரிக்கு அதிபராக பதவி உயர்வு பெற்றுச் சென்ற கே. சுவர்ணேஸ்வரன், கல்லூரியின் சாரண மாணவர்களால் கௌரவிக்கப்பட்ட நிகழ்வும் நடைபெற்றது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவில் மனித துயரத்தை வேடிக்கை பார்க்க மாட்டேன்!

## அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ்

வாஷிங்டன், ஜூலை 27

**"தன்னைத் தற்காத்துக் கொள்ள இஸ்ரேலுக்கு முழு உரிமை உள்ளது. அதே வேளை, காஸாவில் நிலவும் மனிதத் துயரத்தின் வீச்சு பற்றிய எனது அக்கறையை நெதன்யாகுவிடம் மிகத் தெளிவாக முன்வைத்தேன். இதில் நான் அமைதியாக இருக்கப்போவதில்லை"- இவ்வாறு அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் தெரிவித்தார்.**



இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடனான சந்திப்புக்குப் பின்னர் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் போட்டியில் இருக்கும் கமலா ஹாரிஸ் தெரிவித்துள்ள கருத்து, காஸா பிரச்னையில் அவரின் மாறுபட்ட நிலைப்பாட்டினை உணர்த்துவதாக அமைந்துள்ளது. இது அமெரிக்க அரசியலில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இதேவேளை, இஸ்ரேல் பிரச்னை குறித்து வெள்ளை மாளிகை தேசிய பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி கூறுகையில், இஸ்ரேல் - ஹமாஸ் படையினர் இடையேயான போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதில் சில சிக்கல்கள் நிலவுகின்றன. இரு தரப்புமே சில சமரசங்களை செய்து கொள்ள வேண்டியிருக்கிறது- என்றார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்துள்ள சூழலில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அமெரிக்கப் பயணம் கவனம் பெற்றுள்ளது. நெதன்யாகுவின் வருகையையொட்டி வெள்ளை மாளிகையில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

முதலில் ஜனாதிபதி ஜோ பைடனை இஸ்ரேல் பிரதமர் சந்தித்தார். அப்போது, ஹமாஸ் படையினரால் பணயக் கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டுள்ள அமெரிக்கர்களின் குடும்பத்தினரும் இருந்தனர். இந்தச் சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பிரதிநிதிகள், போர் நிறுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு எமது உறவினர்கள் நாடு கொண்டுவரப்படுவார்கள் என நம்புவதாகத் தெரிவித்தனர். (எ)



# "குற்றவியல் வழக்குகளுக்காக நீதிமன்றுக்கு அலையும் ட்ரம்ப்"

வாஷிங்டன், ஜூலை 27

"நான் ஒரு சட்டத்தரணி, என்னை எதிர்க்கும் குடியரசுக் கட்சி வேட்பாளர் ட்ரம்ப் கிரிமினல் (குற்றவியல்) குற்ற வழக்குகளுக்காக நீதிமன்றங்களுக்கு ஓடிக் கொண்டிருப்பவர் என்று அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் தெரிவித்தார்.

திடீரென நடந்த ட்ரம்ப் மீதான துப்பாக்கிச் சூடு, பைடனின் விலகல், கமலா ஹாரிஸை அவர் ஆதரித்தது என அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் களதில் அடுத்தடுத்த திருப்பங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்க ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட வாய்ப்புகள் அதிகமுள்ள கமலா ஹாரிஸின் முதல் பிரசார கூட்டம் உலகளவில் கவனம் பெற்றுள்ளது.

குறிப்பாக, "டொனால்ட் ட்ரம்ப் நம் தேசத்தை பின்னோக்கி இழுத்துச் செல்வார். நாம் சுதந்திரமான, சட்டத்தை பின்பற்றும் தேசத்தில் வசிக்க வேண்டுமா? அல்லது வெறுப்பும், பயமும், குழப்பமும் நிரம்பிய தேசத்தில் இருக்க வேண்டுமா?" என்று வினவி கூட்டத்தில் இருப்பவர்கள் 'கமலா, கமலா' என ஆர்ப்பரிக்கச் செய்தார்.

இதேவேளை, ட்ரம்ப் செய்தியாளர்கள் சந்திப்பில், "2020 ஜனாதிபதித் தேர்தலில் களம் காண்பதற்கான போட்டியில் கமலா ஹாரிஸ் முதல் சுற்றுக்கே தாக்குப் பிடிக்கவில்லை. நான் இப்போது அவருடன் நேருக்கு நேர் விவாதிக்க விரும்புகிறேன். ஆனால், அவர் அதில் நிச்சயம் தோற்பார். ஏனென்றால் அவர்கள் கட்சியின் அரசியல் கொள்கைகள் அன்றும், இன்றும் மாறவே இல்லை" என்று கூறினார். (எ)

# "ஒன்றும் புரியவில்லை"

## ஜனாதிபதி பைடனின் உரையை சாடிய ட்ரம்ப்



வாஷிங்டன், ஜூலை 27

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், வெள்ளை மாளிகையின் ஓவல் அலுவலகத்தில் இருந்து ஜனாதிபதித் தேர்தல் போட்டியில் இருந்து விலகியது குறித்து நாட்டு மக்களிடம் உரையாற்றினார். அதனை முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விமர்சித்துள்ளார்.

இது குறித்து தனது சமூக வலைத்தளத்தில் ட்ரம்ப் தெரிவித்தவை வருமாறு, "பைடனின் உரையில் ஒன்றும் புரியவில்லை. சிலவற்றை தான் புரிந்துகொள்ள முடிந்தது. அது மிகவும் மோசமாக இருந்தது. பைடனும், கமலா ஹாரிஸும் அமெரிக்காவுக்கு சங்கடம் தருகின்றனர். இது போல ஒருபோதும் இருந்ததில்லை" என குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ட்ரம்ப் தெரிவித்தார். (எ)

# அகதிகளுக்கு ஆதரவான பேச்சு தீவிரவாதிகளுக்கு உதவக்கூடும்

## மம்தாவுக்கு பங்களாதேஷ் எதிர்ப்பு



புதுடில்லி, ஜூலை 27

மேற்குவங்கத்தின் கதவுகளைத் தட்டும் பங்களாதேஷ் அகதிகளுக்கு ஆதரவு அளிக்கப்படும் என்ற மம்தா பானர்ஜியின் பேச்சுக்கு பங்களாதேஷ் அரசு ஆட்சேபனை தெரிவித்துள்ளது. தீவிரவாதிகள் இந்த அறிவிப்பை தவறாகப் பயன்படுத்தக்கூடும் என்றும் அந்த நாட்டு அரசு குறிப்பிட்டுள்ளது.

மேற்குவங்கத்தில் கடந்த 21ஆம் திகதி நடந்த தியாகிகள் தின பேரணியில் உரையாற்றிய அம்மாநில முதல்வர் மம்தா பானர்ஜி, "பங்களாதேஷ் வேறு ஒரு நாடு என்பதால் அதைப் பற்றி நான் பேச முடியாது. அதைப் பற்றி இந்திய அரசு பேசும். ஆனால், அங்குள்ள ஆதரவற்ற மக்கள் மேற்கு வங்கத்தின் கதவுகளைத் தட்டினால் நாங்கள் அவர்களுக்கு ஆதரவு அளிப்போம். அண்டை நாடுகள் அகதிகளை மதிக்க வேண்டும் என்று ஐ. நா. சபையின் தீர்மானம் ஒன்று உள்ளது" என்று தெரிவித்தார்.

இந்த அறிவிப்புக்கு இந்தியத் தூதரகத்தில் பங்களாதேஷ் அரசு கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளது. இந்த வகையான கருத்துகள் குறிப்பாக அகதிகளுக்கு அடைக்கலம் கொடுக்கப்படும் போன்ற பேச்சுகளை தீவிரவாதிகள் மற்றும் தவறான நபர்கள் அவர்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளக்கூடும் என்றும் தெரிவித்துள்ளது.

அரசு வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீடு தொடர்பில் பங்களாதேஷத்தில் மாணவர்கள் நடத்திய போராட்டம் வன்முறையாக மாறியது. இதனையடுத்தே அங்கிருந்து பலரும் குறிப்பாக மாணவர்கள் இந்தியா உள்ளிட்ட அண்டை நாடுகளுக்குள் தஞ்சம் புக முயற்சித்து வருகின்றனர். இதேவேளை, பங்களாதேஷில் வன்முறைகளால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 184 ஆக அதிகரித்தது. (எ)

# மைதானம்மீது ட்ரோன் தாக்குதல் சிறுவர்கள் உட்பட 10 பேர் மரணம்

பொகோடா, ஜூலை 27

கொலம்பியாவில் உதைபந்தாட்ட மைதானம் மீது நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் சிறுவர்கள் உட்பட 10 பேர் பலியாகினர்.

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் பல்வேறு கிளர்ச்சி குழுக்கள் செயல்படுகின்றன. இந்த கிளர்ச்சியாளர்கள் அப்பாவி மக்கள் மற்றும் பொதுச்சொத்துக்கள் மீது தாக்குதல் நடத்தி அரசாங்கத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளனர்.

எனவே, கிளர்ச்சியாளர்களை கட்டுப்படுத்த அரசாங்கம் பல்வேறு நடவடிக்கை மேற்கொள்கிறது. இந்த நிலையில் ஆர்ஜெலியா நகரில் உள்ள உதைபந்தாட்ட மைதானத்தில் சிறுவர்கள் பலர் விளையாடிக் கொண்டிருந்தனர்.

அப்போது அந்த மைதானம் மீது சரமாரி ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் அங்கிருந்தவர்கள் பயத்தில் அலறியடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தனர். இதனையடுத்து அங்கு விரைந்த மீட்புப் படையினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

எனினும், இந்தத் தாக்குதலில் சிறுவர்கள் உட்பட 10 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். மேலும் சிலர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். எனவே, பலி எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது. (எ)

# உலகின் சக்திவாய்ந்த கடவுச்சீட்டு தரவரிசையில் சிங்கப்பூர் முதலிடம்

புதுடில்லி, ஜூலை 27

உலகின் மிகவும் சக்தி வாய்ந்த கடவுச்சீட்டு தரவரிசைப் பட்டியலில் சிங்கப்பூர் முதலிடம் பிடித்துள்ளது. அந்த நாட்டின் கடவுச்சீட்டை பயன்படுத்தி 195 நாடுகளுக்கு வீசா இல்லாமல் பயணிக்க முடியும். இதே வேளை, 58 நாடுகளுக்கு வீசா இல்லாமல் பயணம் செய்யக் கூடிய தகுதியை பெற்றுள்ள இந்தியா, இந்த தரவரிசையில் 82ஆவது இடம்பிடித்துள்ளது.

சர்வதேச விமான போக்குவரத்து சங்கத்தின் தரவுகளின் அடிப்படையில் உலகின் சக்தி வாய்ந்த 199 நாடுகளின் கடவுச்சீட்டுக்களின் தரவரிசை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, ஜப்பான் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகள் இந்த தரவரிசையில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளன. இந்த நாடுகளின் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி 192 நாடுகளுக்கு வீசா இல்லாமல் பயணிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் மா அதிபரை பதவி நீக்குவதற்கு பாராளுமன்ற பெரும்பான்மை அவசியம்!

## பிரதமர் தினேஸ் சபையில் கூறினார்



கொழும்பு, ஜூலை 27

**தற்போது பதவியிலிருக்கும் பொலிஸ் மா அதிபரை பதவியிலிருந்து விலக்க, பாராளுமன்றத்தில் பிரேரணை யொன்றை கொண்டுவந்து பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைப் பெற வேண்டும் என பிரதமர் தினேஸ் குணவர்த்தன குறிப்பிட்டார்.**

பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொலிஸ் மா அதிபராக கடமையாற்றியவர், பாதுகாப்பு மற்றும் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக் குழுவுக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கி வந்தார்.

இந்தநிலையில், கடந்த 25 ஆம் திகதி உயர்நீதிமன்றமானது, பொலிஸ் மா அதிபருக்கு இடைக்காலத் தடை விதித்துள்ளது.

இந்த வழக்கு தொடர்பான அடுத்த அமர்வு நவம்பர் 11 ஆம் திகதி நடைபெறும் என்றும் திகதி குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், நவம்பர் மாதம் என்பது ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து ஒருமாதம் கடந்து இருக்கும் என்பது அனைவருக்கும் தெரியும்.

புதிய ஜனாதிபதி பதவியேற்கும் காலத்தில்தான் இந்த வழக்கு விசாரணை அடுத்ததாக இடம் பெறும்.

பொலிஸ் மா அதிபர், தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்பட வேண்டிய இந்தத் தருணத்தில் தான் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது பாராளுமன்றுக்குள்ளும் தற்போது குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. அரசமைப்புச் சட்டத்தின் 4 ஆவது உறுப்புரையில் வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக நீதியான தேர்தலை நடத்த வேண்டும் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், உயர்நீதிமன்றமானது இந்தத் தடையை விதிக்கும் முன்னர், தேர்தல் ஆணைக்குழுவின் கருத்தைக் கேட்கவில்லை என்பது உறுதியாகியுள்ளது.

அரசமைப்பின் 44 (அ) 2 ஆம் உறுப்புரையின் கீழ், 14 நாட்களுக்குள் பொலிஸ் மா அதிபரை நியமிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவானது, ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் திகதியை அறிவித்துள்ளது.

இந்த நிலையில், அரசமைப்புச் சபையின் அனுமதியுடன் பொலிஸ் மா அதிபர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

இதற்காக தற்போது பதவியிலிருக்கும் பொலிஸ் மா அதிபரை பதவியிலிருந்து விலக்க, பாராளுமன்றத்தில் பிரேரணை யொன்றை கொண்டுவந்து பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவைப் பெற வேண்டும்.

இப்போதும் பொலிஸ் மா அதிபராக இடைக்கால தடை விதிக்கப்பட்ட பொலிஸ் மா அதிபரே இருக்கிறார்-என்றார். (அ)

# பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு இலஞ்சம் வழங்க முயன்ற ஓட்டோ சாரதி கைது!

கொழும்பு, ஜூலை 27

கறுவாத்தோட்ட போக்குவரத்து பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு 1000 ரூபா இலஞ்சம் கொடுக்க முற்பட்ட ஓட்டோச் சாரதி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கறுவாத்தோட்டம் பொலிஸார் தெரிவித்தனர்.

கறுவாத்தோட்டம் பௌத்தலோக மாவத்தையில் பொலிஸ் கான்ஸ்டபிள் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த போது ஓட்டோவை நிறுத்தி போக்குவரத்து விதிமீறல் தொடர்பில் வழக்குப் பதிவு செய்ய முற்பட்டபோது தண்டப்பணம் விதிக்க வேண்டாம் எனக் கூறி 1000 ரூபா லஞ்சம் கொடுக்க முற்பட்ட சாரதி கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சாரதி வலஸ்முல்லை பகுதியைச் சேர்ந்த 38 வயதுடையவராவார்.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# சட்டவிரோத பண வைப்புக்களை உடனடியாக அறிவிக்க கோரிக்கை

கொழும்பு, ஜூலை 27

சட்டவிரோதமான முறையில் பணத்தை வைப்புத் தொகையாக ஏற்றுக்கொள்ளும் நிறுவனங்கள் தொடர்பில், உடனடியாக தெரிவிக்குமாறு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பி. நந்தலால் வீரசிங்க பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் தலைமையகத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே, ஆளுநர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபையினால் நடத்தப்பட்ட நான்காவது கொள்கை வட்டி வீத மாற்றங்கள் பற்றிய அறிவித்தல் பற்றி இச்செய்தியாளர் மாநாட்டில் கலந்துரையாடப்பட்டது. கொள்கை வட்டி விகிதங்கள் குறைக்கப்படுவதால், கடன் வசதிகளை வழங்கும்போது வட்டி வீதங்களை குறைக்க வேண்டுமென,நிதி நிறுவனங்களுக்கு ஆளுநர் வலியுறுத்தியுள்ளார்.

வட்டி வீதங்களைக் குறைக்கும் வகையில் வங்கி மற்றும் நிதியை ஒழுங்குபடுத்த மத்திய வங்கி தற்போது தயாராக இல்லை என்றும் ஆளுநர் கூறியுள்ளார். (அ)

# துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலி!

கொழும்பு, ஜூலை 27

கொழும்பு கிரேண்ட்பாஸ், வடுல்லவத்தை புரதர செவன அடுக்குமாடி குடியிருப்புக்கு முன்பாக துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வந்த பெண் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் மாலை பெண் ஒருவர் உட்பட இருவர் மீது இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது, 32 வயதான கே. ஜி. ஆர். தர்ஷன என்ற நபர் நேற்று முன் தினம் இரவு உயிரிழந்துள்ளதுடன், ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பெண் நேற்று காலை உயிரிழந்துள்ளார். (அ)

# அதிகளவு புகையுடன் பயணித்த 93 வாகனங்கள் கறுப்பு பட்டியலில்

கொழும்பு, ஜூலை 27

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் புகையுடன் பயணித்த 93 வாகனங்கள் இந்த வருடத்தில் கறுப்புப்பட்டியலில் இடப்பட்டுள்ளதாக வாகன உமிழ்வுச் சோதனை அறக்கட்டளை நிதியம் தெரிவித்துள்ளது.

பொதுமக்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைய குறித்த வாகனங்கள் கறுப்புப் பட்டயலில் இடப்பட்டதாக அதன் பணிப்பாளர் தசன் கமகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சில வாகனங்கள் தீங்கு விளைவிக்கும் வகையில் புகையை வெளியேற்றினால் 070 3500 525 என்ற வாட்ஸ்அப் எண்ணுக்கு புகைப்படம் அல்லது வீடியோக்களை அனுப்புமாறு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம், பொதுமக்களிடம் கோரியிருந்தது.

"மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் அறிமுகப்படுத்திய வாட்ஸ்அப் தொலைபேசி எண்ணை பயன்படுத்தி, அதிக புகையினை வெளியிடும் வாகனம் செல்கிறது என்றால் இடம், நேரம், திகதி மற்றும் வாகன எண் குறிப்பிடப்பட்டு புகைப்படம் அல்லது வீடியோக்களை அனுப்புமாறு கோரப்பட்டிருந்தது.

பின்னர் அந்த வாகன உரிமையாளர்களை மோட்டார் போக்குவரத்து திணைக்கள அலுவலகங்களுக்கு அழைத்து அறுவுறுத்தப்படும்.

அதனையும் பொருட்படுத்தாவிடின் கறுப்புப்பட்டியலில் இடப்படும்.

கடந்த ஆண்டு 1800 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. பின்னர் அவற்றில் சுமார் 200 வாகனங்கள் கறுப்புப் பட்டியலில் இடப்பட்டன.

இந்த வருடத்தில் இதுவரை 517 முறைப்பாடுகள் கிடைத்துள்ள நிலையில் அவற்றில் 93 வாகனங்கள் கறுப்புப் பட்டியலில் இடப்பட்டது-என்றார்.

# பொலிஸ் ஊடக பேச்சாளராக ருவான் குணசேகர நியமனம்

கொழும்பு, ஜூலை 27

பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளராக பிரதிப் பொலிஸ் மா அதிபர் ருவான் குணசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளராக கடமையாற்றிய பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தனிப்பட்ட காரணங்களுக்காக வெளிநாடு சென்றுள்ளார்.

இதேவேளை, நிஹால் தல்துவ நாடு திரும்பிய பின்னர், அவர் மீண்டும் பொலிஸ் ஊடகப் பேச்சாளராக பணியாற்றுவார்என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# நிறைவேற்று அதிகாரம் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிக்கே!

## கூறுகின்றார் கல்வி அமைச்சர் சுசில்

கொழும்பு, ஜூலை 27

நிறைவேற்று அதிகாரம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிக்கே காணப்படுகின்றது என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பாக பாராளுமன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசியலமைப்பு பேரவை நிறைவேற்று அதிகாரத்தில் ஒரு பகுதியாகும்.

நிறைவேற்று அதிகாரம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிக்கே காணப்படுகின்றது. அமைச்சரவையில் கலந்துரையாடி தீர்மானங்களை மேற்கொள்ளமுடியாது.

அமைச்சரவையில் கலந்துரையாட முடியுமே தவிர தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது. பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பாக நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

அந்த விடயம் தொடர்பாக 9 பேரினால் மனுதாக்கல் செய்யப்பட்டிருந்தது.உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தினை அமைச்சரவையில் பரிசீலிக்க முடியும். நீதிமன்ற தீர்ப்பு தொடர்பாக நாம் கேள்வி எழுப்பவில்லை.

ஆனால் அந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது யார் என்ற கேள்வி எழுகின்றது. அரசியலமைப்பு பேரவையின் அனுமதியுடன் வழங்கப்பட்ட நியமனம் ஒன்றுக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பாக அரசியலமைப்பு பேரவையில் மீண்டும் கலந்துரையாடப்படும்-என்றார். (அ)

# வீதியில் பயணித்த காரொன்றை நிறுத்தி பணம் வாகன பதிவுப் புத்தகம் கொள்ளை

## பொலிஸ் சார்ஜன்ட் கைது

கொழும்பு, ஜூலை 27

நீர்கொழும்பு பகுதியில் பயணித்த காரொன்றினை நிறுத்தி 02 இலட்சம் ரூபா பணம் மற்றும் வாகனப் பதிவுப் புத்தகம் ஆகியவற்றை கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படைப் பிரிவில் பணிபுரியும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரே கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் வேயங்கொடை பகுதியில் வசிப்பவர் என பொலிஸார் தெரிவித்தனர். இந்தக் கொள்ளைச் சம்பவம் நீர்கொழும்பு - கொழும்பு வீதியில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செப்.21...

அரசியல் கட்சியின் வேட்பாளர் 50 ஆயிரம் ரூபாயையும் வேறு அரசியல் கட்சி அல்லது சுயேச்சை வேட்பாளர் 75 ஆயிரம் ரூபாயையும் கட்டுப்பணமாக செலுத்த வேண்டும்.

தொடர்ந்து, தேர்தலில் போட்டியிடுவோர் தமது வேட்புமனுக்களை எதிர்வரும் ஒகஸ்ட் 15ஆம் திகதி முதல் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிமனையில் தாக்கல் செய்ய முடியும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ஐ)

## இரவோடிரவாக...

இந்தப் பகுதியில், நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு பிக்கு ஒருவரின் தலைமையில் இந்தத் துப்பரவுப் பணி நடைபெற்றது. விடயமறிந்து அந்தப் பகுதியில் குவிந்த பொதுமக்கள் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து நேற்று வெள்ளிக்கிழமை குச்சவெளி பிரதேச செயலாளரின் கவனத்துக்கு இந்த விடயம் கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்து துப்பரவு பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

இலந்தைக்குளத்தில் பரம்பரையாக வாழ்ந்து வந்த தமிழ் பேசும் மக்கள் போரால் 1990ஆம் ஆண்டு போரால் இடம்பெயர்ந்தனர். அவர்கள் தம்மை மீளக்குடியமர அனுமதிக்குமாறு தொடர்ச்சியாக அதிகாரிகளிடம் கோரிக்கை முன்வைத்து வருகின்றனர். இந்த நிலையிலேயே, அந்த மக்களின் காணிகளில் விகாரை அமைக்கும் நோக்கில் பிக்கு ஒருவர் ஆக்கிரமிக்க முயற்சி செய்து வருகிறார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. (ஐ)

## தமிழ் பொது...

வேட்பாளர் நிறுத்தப்படக்கூடாது. இதன் அடிப்படையில், தமிழ் பொது வேட்பாளர் கருத்தியலை ஆதரிக்க வில்லை.

பொது வேட்பாளரை நிறுத்துவது இல்லை என்று தமிழ் அரசு கட்சி தீர்மானித்துள்ளது. அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் போடியிடும் பிரதான வேட்பாளர்களுடன் எதிர்காலத்தில் பேச்சுகளை நடத்துவோம் என்றும் சுமந்திரன் கூறியுள்ளார். (ஐ)

## பாணின்...

மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில், 450 கிராம் நிறையுடைய ஓர் இறாத்தல் பாணின் விலை யாழ்ப்பாணத்தில் 140 ரூபாயாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## எந்தவொரு...

சுமந்திரன் எம். பி. கூறியிருந்தார். அவ்வாறான தீர்மானம் ஒன்றை தமிழ் அரசுக் கட்சி எடுத்ததா என்று சிறீதரன் எம். பியை தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இலங்கை தமிழ் அரசுக் கட்சி தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதா அல்லது தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களில் ஒருவரை ஆதரிப்பதா என்பது தொடர்பில் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை. இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு அல்லது எதிர்ப்பு நிலைப்பாடு தொடர்பில் யாரேனும் பேசினால் அது அவர்களின் சொந்த விருப்பு மட்டுமே - அது கட்சியின் தீர்மானம் அல்ல.

ஜனாதிபதித் தேர்தல் திகதி இப்போதுதான் அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி விரைவில் கூடி தனது நிலைப்பாட்டை எடுத்து அறிவிக்கும் - என்றார். (ஐ)

# உயர்நீதிமன்ற தீர்ப்பை அரசு மதிக்க வேண்டும்!

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 27

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகளை புறக்கணிப்பது நாட்டை பெரும் சிக்கலுக்கு இட்டுச் செல்லும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் அவர் உரையாற்றியபோதே இதனைத் தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பொலிஸ் மா அதிபர் பதவிக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது. அரசமைப்பின் நூற்றி இருபத்தி ஆறாவது பிரிவின் கீழ் அடிப்படை உரிமைகள் மனுக்களை விசாரிக்க உயர்நீதிமன்றத்திற்கு பிரத்தியேக அதிகாரம் உள்ளது.

பாராளுமன்றமோ அல்லது நிறைவேற்று அதிகாரமோ அது பற்றி முடிவுகளை எடுப்பதில்லை. இது உயர் நீதிமன்றத்தால் வழங்கப்படுகிறது. அரசமைப்பு சபையின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்படும் நியமனங்கள் உள்ளன. பொலிஸ் மா அதிபர் பதவியும் அதற்குரியது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இறுதியானது அல்ல. ஓர் இடைக்கால முடிவு. அதற்கு மதிப்பளித்து பொலிஸ் மா அதிபரை நியமிப்பதுதான் நடக்க வேண்டும். அரசமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அரசமைப்பு ஒரு துண்டு துண்டா? நீங்கள் நினைத்தபடி முடிவுகளை எடுக்க முடியுமா? இந்த நேரத்தில் சபாநாயகர் புத்திசாலித்தனமாக செயல்படவேண்டும். ஏனெனில், இந்த முடிவுகளின் விளைவுகளை நாம் அனைவரும் மற்றும் பொதுத்துறையில் உள்ள அனைவரும் அனுபவிக்க வேண்டியிருக்கும். நன்றாக புரிந்து கொள்ளுங்கள். உயர்நீதிமன்றத்தின் அதிகாரத்தை முற்றிலும் மீறி தன்னிச்சையான முடிவுகளுக்கு செல்வதால் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகிறோம்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு செல்லாது என்று எப்படிச் சொல்ல முடியும்? உயர்நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவை ஜனாதிபதி பின்பற்றி அரசியல் சாசனத்தின்படி செயல்பட வேண்டும். இடைக்கால உத்தரவைப் பெற்ற பொலிஸ் மா அதிபர் சிவில் உடையில் பாதுகாப்பு அமைச்சுக்கு வந்து பொலிஸாரை கட்டுப்படுத்தினார். இது சரியா. அவரால் அப்படி செயல்பட முடியுமா?

பாராளுமன்றத்தில் இன்று (நேற்று) இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அரசமைப்பிலும் இரங்கல் பிரேரணை முன்வைக்கப்பட வேண்டும். இந்த பிரதமருக்கும் இது அவமானம். அவரும் நானும் றோயல் கல்லூரியின் பழைய மாணவர்கள். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு செல்லாது என்கிறார் றோயல் கல்லூரியின் முன்னாள் மாணவர். உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை மதியுங்கள் - என்றார். (ஐ)

# கனடாவின் இனப்படுகொலை குற்றச்சாட்டை மறுக்கின்றோம்

## வெளிவிவகார அமைச்சு அறிக்கை

கொழும்பு, ஜூலை 27

கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ வெளியிட்ட "இனப்படுகொலை" குற்றச்சாட்டை முற்றாக நிராகரிப்பதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. அத்துடன், கனடாவில் வாக்கு வங்கியை தக்கவைத்துக்கொள்ளும் நோக்கில் முன்வைக்கப்படும் இந்தக் குற்றச்சாட்டு இலங்கைக்கும் கனடாவுக்கும் இடையிலான அமைதி மற்றும் சமூக ஒருமைப்பாட்டுக்கு ஒருபோதும் உதவாது - என்றும் தெரிவித்துள்ளது.

கறுப்பு ஜூலை கலவரத்தின் 41 ஆவது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு கடந்த செவ்வாய்க்கிழமை கனடிய பிரதமர் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். இந்த அறிக்கையை மறுத்தே வெளிவிவகார அமைச்சு நேற்று பதில் அறிக்கையை வெளியிட்டது.

அதில், கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ கடந்த 23ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில் இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதாகக் குறிப்பிட்டமையை முற்றாக நிராகரிக்கிறோம். அத்துடன், இவ்விடயத்தில் இலங்கையின் நிலைப்பாடு குறித்து இதற்கு முன்னரும் கனேடிய பிரதமருக்குத் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

கனடாவில் வாக்கு வங்கியைத் தக்கவைத்துக்கொள்ளும் நோக்கில் முன்வைக்கப்படும் இக்குற்றச்சாட்டு இலங்கைக்கும் கனடாவுக்கும் இடையிலான அமைதி மற்றும் சமூக ஒருமைப்பாட்டுக்கு ஒருபோதும் பங்களிக்காது - என்றுள்ளது. (ஐ)

## இளைஞரை...

என்ற இளைஞரே இவ்வாறு காயங்களுக்கு உள்ளானார்.

தனது பெண் நண்பியை பார்ப்பதற்காக உரும்பிராய்க்கு வந்திருந்த இளைஞரை வீதியில் மறித்த குழு அவரை முச்சக்கரவண்டியில் கடத்திச் சென்றது. அவரின் தலைமுடியை வெட்டியதுடன், அவரின் உடலில் வாளால் வெட்டியும் கீறியும் சித்திரவதைக்கு உள்ளாக்கியது. இதன்பின்னர், அந்த இளைஞரை உடுவில் பகுதியில் வீதியில் தள்ளிவிட்டு சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் அறிந்து அங்கு வந்த மானிப்பாய் பொலிஸார் இளைஞரை அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். அத்துடன், மேலதிக விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## மகிந்த...

சந்திப்பில் இந்தத் தகவலைத் தெரிவித்தனர்.

மேலும், பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மை எம். பிக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையே ஆதரிக்கின்றனர். எனவே, பொதுஜன பெரமுன வேறொரு வேட்பாளரை நிறுத்தினால் அது கட்சியின் வாக்குகளை பாதிக்கும் எனவும் மகிந்தவுக்கு கூறிய பெரமுனவினர் வேறொரு வேட்பாளரை நிறுத்த வேண்டாம் என்றும் வலியுறுத்தினர்.

இது தொடர்பில், கட்சியுடன் கலந்துரையாடி விரைவில் முடிவை அறிவிப்பதாக மகிந்த ராஜபக்ஷ இதன்போது கட்சியினருக்கு தெரிவித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சின்னக் கதிர்காமம் நோக்கி ஒகஸ்ட் 17இல் பாதயாத்திரை

காரைதீவு, ஜூலை 27

வரலாற்று பிரசித்தி பெற்ற "சின்னக் கதிர்காமம்" என அழைக்கப்படும் மண்டூர் சிறீ முருகன் ஆலயத்துக்கான வருடாந்த பாதயாத்திரை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 17ஆம் திகதி சனிக்கிழமை காரைதீவிலிருந்து ஆரம்பிக்கவுள்ளது.

மண்டூர் முருகன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்து 19 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைய உள்ளது.

காரைதீவில் இருந்து அதிகாலை நான்கு மணிக்கு ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் பாதயாத்திரை நடைபெறுவது வழக்கம்.

காரைதீவு இந்து சமய விருத்திச்சங்கம் ஏனைய அமைப்புகளுடன் இணைந்து இந்த பாதயாத்திரையை வருடாந்தம் நடத்தி வருகிறது.

காரைதீவிலிருந்து அதிகாலை 4 மணிக்கு புறப்படும் பாதயாத்திரை கல்முனை, நற்பிட்டிமுனை, சேனைக் குடியிருப்பு, கிட்டங்கி நாவிதன்வெளி, வேப்பையடி, தம்பலவத்தை ஊடாக மண்டூர் முருகன் ஆலயத்தை சென்றடையும். (எ)

## சுதந்திர...

கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறீ லங்கா சுதந்திர கட்சி சார்பில் தேர்தலில் களமிறங்க இதுவரையில் வேட்பாளர் ஒருவர் தெரிவு செய்யப்படவில்லை. யாரை முன்னிலைப்படுத்துவது என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டியுள்ளது. இது தொடர்பில் கட்சியினருடன் பேசி முடிவு எடுக்கப்படும்.

தேர்தலில் களமிறங்கவுள்ளதாக அறிவித்துள்ள எந்த வேட்பாளருக்கும் ஆதவளிப்பதாக சுதந்திரக் கட்சி எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்க வில்லை. விஜயதாஸ ராஜபக்ஷ சிறீ லங்கா சுதந்திர கட்சியின் வேட்பாளர் அல்லர். நாடு மற்றும் கட்சியின் எதிர்காலம் தொடர்பில் சிந்தித்து பொருத்தமான தீர்மானத்தை எடுப்போம் - என்றார். (ஐ)

## நான்குபேர்...

ஏ. எஸ். பி. லியனகே இலங்கை தொழிலாளர் கட்சி சார்பிலும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பதில்...

தற்போதைய பொலிஸ் மாஅதிபருக்கு உயர்நீதிமன்றம் வழங்கிய இடைக்கால தடை உத்தரவுக்கு எந்தவொரு சட்ட அடிப்படையும் இல்லை. இதனால், குறித்த தடை உத்தரவை பாராளுமன்றத் தால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் கூறினார். (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 10இல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## ஜனாதிபதித் தேர்தலுக்காக கட்டுப்பணம் செலுத்தலாம்

கொழும்பு, ஜூலை 27

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட நிலையில் நேற்று முதல் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது கட்டுப்பணத்தை வைப்பிலிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டு தேர்தல்கள் ஆணைக்குழு இதனை அறிவித்துள்ளது.

அதன்படி, வேட்பாளர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றினால் பெயர் குறித்து நியமனம் செய்யப்பட்ட வேட்பாளராயின் 50 ஆயிரம் ரூபாவும், வேறொரு அரசியல் கட்சியினால் அல்லது வாக்காளர் ஒருவரினால் பெயர் குறித்து நியமனம் செய்யப்பட்ட வேட்பாளராயின் 75 ஆயிரம் ரூபாவும் கட்டுப்பணமாக வைப்பிலிடப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## இரு தேர்தல்களையும் நடத்த ஆணைக்குழு தயார்நிலையில்!

கொழும்பு, ஜூலை 27

பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் பாராளுமன்றத் தேர்தலையும் ஜனாதிபதித் தேர்தலையும் நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தயாராக இருப்பதாக அதன் தலைவர் ஆர்.எம்.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தொடர்பில் உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ள போதிலும் அது ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளில் தலையிடாது எனவும் அவர் கூறினார்.

எதிர்காலத்தில் நியமிக்கப்படவுள்ள பதில் பொலிஸ் மா அதிபரைக் கொண்டு பணிகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் அரசியலமைப்பின் 21ஆவது சட்ட திருத்தத்திற்கு அமைய, பொலிஸ் மாஅதிபர் பதவி வெற்றிடமாகாத பின்னணியில், பதில் பொலிஸ் மாஅதிபர் ஒருவரை நியமிக்கும் இயலுமை ஜனாதிபதிக்கு கிடையாது என அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டார். (அ)

## ரணில் பதவி விலகவேண்டும்!
### சஜித் பிரேமதாஸ வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 27

பொலிஸ் மா அதிபரை நியமிக்க முடியாவிட்டால் ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

பதில் பொலிஸ்மா அதிபரை நியமிப்பதற்கு சட்டரீதியான தடைகள் ஏதும் இல்லாத நிலையில் ஜனாதிபதியால் பதில் பொலிஸ் மா அதிபரை நியமிக்க முடியாது என கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் எதிர்கட்சி தலைவர் குறிப்பிட்டார். (அ)

## சரத் கீர்த்திரத்ன கட்டுப்பணம் செலுத்தினார்!

கொழும்பு, ஜூலை 27

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுவதற்காக முன்னாள் பாராமன்ற உறுப்பினர் சரத் கீர்த்திரத்ன நேற்றுக் காலை கட்டுப்பணத்தைச் செலுத்தினார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தைச் செலுத்திய முதலாவது வேட்பாளர் சரத் கீர்த்திரத்ன கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டவர். (அ)

# பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் தலையீடு செய்யப் போவதில்லை!

### அறிவித்தார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, ஜூலை 27

**பொலிஸ் மா அதிபரின் நியமனம் தொடர்பான விடயங்களில் தலையீடு செய்வதைத் தவிர்த்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.**

பொலிஸ் மா அதிபரின் நியமனம் தொடர்பான விடயங்களில் தலையீடு செய்வதை தவிர்த்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு அறிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபரின் நியமனம் தொடர்பாக ஜனாதிபதிக்கு சட்ட ஆலோசனை கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தேர்தல் காலப் பகுதியில் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை பதில் பொலிஸ்மா அதிபரை நியமிக்கவேண்டிய தேவை ஏற்படும் எனவும் சட்டவல்லுநர்கள் ஜனாதிபதிக்கு எடுத்துரைத்துள்ளனர்.

மேலும் இந்த நியமனத்தை முன்னிலைப்படுத்தி மனுக்கள் தாக்கல் செய்ய முடியும் என்றும்



சட்ட வல்லுநர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

எனவே பொலிஸ்மா அதிபர் விடயத்தில் தலையீடு செய்வதை தான் தவிர்த்து கொள்வதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு அறிவித்துள்ளார். (அ)

# பொலிஸ்மா அதிபராக தேசபந்து நியமிக்கப்பட்டமை சட்டபூர்வம்!

### சபாநாயகர் சபையில் விளக்கம்

கொழும்பு, ஜூலை 27

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டமை தொடர்பில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று பாராளுமன்றத்தில் விசேட விளக்கமளித்தார்.

அதன்படி பொலிஸ் மா அதிபரை நியமிப்பதற்கான தீர்மானம் சரியானது, சட்டபூர்வமானதும் அரசியலமைப்புக்கு உட்பட்டது மற்றும் நல்லெண்ண அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவு என அவர் தெரிவித்தார்.

மேலும் தற்போது எழுந்துள்ள பிரச்னைக்கு ஜனாதிபதியால் கூட தீர்வு காண முடியாது என தெரிவித்த சபாநாயகர், நீதிமன்றத்தின்



மூலமே தீர்வு காணப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார். (அ)

# ரணிலுக்கு எதிராக வழக்குகள் தாக்கல்?

### கூறுகிறார் தயாசிறி ஜயசேகர

கொழும்பு, ஜூலை 27

அரசமைப்பை மீறியமைக்காக எதிர்காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்படலாம் என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை சர்ச்சைக்கு உட்படுத்த வேண்டாம்.

அரசமைப்புக்கு இணங்கவே இந்த இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடைக்கு இணங்க, பதில் பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது.

எனினும், பதில் பொலிஸ் மா அதிபரை அரசமைப்புச் சபையினால் நியமிக்க முடியாது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்திதான், பதில் சட்டமா அதிபரைக்கூட ஜனாதிபதி நியமித்தார்.

இதனை மீறினால், ஜனாதிபதி பதவியிலிருந்து சென்றால்கூட, அரசமைப்பை மீறியமைக்காக எதிர்காலத்தில் அவருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்படலாம் - என்றார். (அ)

## அரசமைப்புச் சபை குறித்து தெளிவுபடுத்தப்படவேண்டும்

### சபையில் விமல் வீரவன்ஸ கோரிக்கை

கொழும்பு, ஜூலை 27

அரசமைப்புச் சபையானது பாராளுமன்றுக்கு உட்பட்டதா அல்லது நிறைவேற்று அதிகாரத்துக்கு உட்பட்டதா என்பதை தெளிவுபடுத்தவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

அரசமைப்புச் சபையானது பாராளுமன்றுக்கு உரியது என்று பிரதமர் இங்கே கூறினார்.

ஆனால், அரசமைப்புக்கு இணங்க அரசமைப்புச் சபையானது நிறைவேற்று அதிகாரத்துக்கு உட்பட்டது என்றே கூறப்பட்டுள்ளது. எனவே, அரசமைப்புச் சபையானது பாராளுமன் றுக்கு உட்பட்டதா அல்லது நிறைவேற்று அதிகாரத் திற்கு உட்பட்டதா என்பதை இங்கே தெளிவுபடுத்த வேண்டும்.

அல்லது இதற்கு முன்னர் வழங்கப்பட்ட வழக்குத் தீர்ப்புக்களில் ஏதேனும், அரசமைப்புச் சபையானது பாராளுமன்றுக்கு உரியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளதா?

இது தொடர்பான விளக்கமில்லாமல், நாம் விவாதிப்பதில் அர்த்தம் கிடையாது - என்றார். (அ)

## எத்தகைய தடைகள் வந்தாலும் நீதி நடவடிக்கைகள் தடைப்படா!

### அமைச்சர் டிரான் அலஸ்



கொழும்பு, ஜூலை 27

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் குற்றவாளிகளுக்கு எதிரான நீதி நடவடிக்கைகள் எத்தகைய தடைகள் வந்தாலும் தடுக்கப்படாது என பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

பதில் பொலிஸ் மா அதிபர் ஒருவர் சிபாரிசு செய்யப்பட்டுள்ளாரா என வினவியபோதே அவர் இதனை கூறினார்.

அத்துடன் நீதி நடவடிக்கைகளின் கீழ் கைது செய்யப்பட்ட போதைப்பொருள் கடத்தல்காரர்களை காப்பாற்றவும் கைதுகளை தடுக்கவும் பலர் முயற்சித்ததாகவும் அமைச்சர் கூறினார்.

பொலிஸ் மா அதிபர் பதவியில் இல்லாவிட்டாலும் நீதித் திட்டம் நிறுத்தப்படாது எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.